திராவிடநாடு
20—12—59 | வார வெளியீடு | விலை 16 காசு

SUNDARAM STORES
ELLIS ROAD, MADRAS-2

# வறுமை நீங்குமா?

—[ சாந்தாமணாளன் ]—

துன்பம் தீராதா?—மக்கள்
துன்பம் தீராதா?
உணவு விலை குறைந்து வாழ்வில்
ஊக்கம் வராதா?—அமைச்சர்
உணர்வு கொள்வாரா?

உண்மை மலருமா?—உழைப்போர்
உயிரும் பிழைக்குமா?
பணம் படைத்தோர் பதுக்கி வாழும்
பண்பு மாறுமா?—ஆள்வோர்
பார்வை திரும்புமா?

விளைவு உயர்ந்தது!—உழவன்
விழியும் விரிந்தது!
விளைவு கண்ட அவன் வயிறு
வாடி வதங்குது!—அரிசி
ஓடிப் பதுங்குது!

கரும்பு விளையுது!—ஏழைக்
கையும் தேயுது!
கூலி மட்டும் அவன் கையில்
குறைவு காணுது!—சர்க்கரை
உயர்ந்து போகுது!

வறுமை நீங்குமா?—எளியோர்
வாழ்வும் நிலைக்குமா?
ஓட்டு வாங்கிப் போனவர்கள்
உறக்கம் கலையுமா?—மக்கள்
உறவும் தழைக்குமா?

# சோறிட்ட கை...!

‘சுதா’

சுண்டெலிக்காக இரக்கப்படுகிறவர்கள் யார் இருக்கிறார்கள்? அவனுக்காக வருந்துகிறவர்கள்தாம் யார் இருக்கிறார்கள்? அல்லது அவனுக்காக அழுகிறவர்கள்தாம் இருக்கிறார்களா? யாருமே இல்லை! ஒருவரும் இல்லை!!

பிறரை நாடி அலையும் நாயாவது எப்படியாகிலும் பிழைத்துவிடுகிறது; வயிற்றை நிரப்பிக்கொள்கிறது; சுகமாகத் தெருத்தெருவாக அலைகிறது! ஆனால் சுண்டெலியின் பிழைப்போ நாயைவிடக் கேவலமானது! மோசமானது!! வெட்கக்கேடானது!!! பிறரின் கையை எதிர்பார்த்து வாழ்பவன்—சுண்டெலி! பிச்சை எடுத்து வயிறுவளர்ப்பவன்—இந்தச் சுண்டெலி!! எச்சில் இலைக்காக வீடு, வீடாக, தெருத் தெருவாக நாடி, பேயாகி அலைந்து, தானே போகின்ற உயிரையும் இழுத்துப் பிடித்து இன்னும் செத்தும் சாகாமல் வாழ்பவன் இந்தச் சுண்டெலி.

பிச்சைக்காரச் சுண்டெலிக்காக யார் இரக்கப்படப் போகிறார்கள்? எச்சில் இலைகளைப் பொறுக்கி வயிறு வளர்க்கும் சுண்டெலிக்காக யார் வருந்துவார்கள்? நடைபாதையில் நாதியற்றுக் கிடக்கும் சுண்டெலிக்காக யார் அழப்போகிறார்கள்?

கொட்டும் மழையிலும் இப்படிப்பட்ட எண்ணம் சுண்டெலியின் மனதில் அலைமோதியது. லோனாவாலா பகுதியின் ஒற்றைவாடைத் தெருவில் கோடியில் இருக்கும் தூங்குமூஞ்சி மரத்தின் கீழ் மழைக்காக அன்று முழுவதும் தங்கி இருந்தான். தினமும் இரண்டு வேளை பட்டினியால் வாடி வதங்கும் சுண்டெலிக்கு அன்று ஒரு சோதனை நாள்போலும்! அன்றைய தினம் முழுவதும் விடாது மழை பெய்துகொண்டிருந்தது. பேய்க் காற்றும், குளிரும், விடாத மழையும் அவனை மரத்தடியைவிட்டு நகரவிடவில்லை. அவனுடைய கை, கால், உடம்பு முழுவதும் ‘சில்லிட்டுவிட்டன; விறைத்துக் கொண்டது.

அந்த நேரத்தில்தான் அவன் தன்னைப்பற்றியே நினைத்துப் பார்த்தான். யாரோ, எப்போதோ, சொல்லியது அவன் நினைவுக்கு வந்தது. ‘அரிது, அரிது, மானிடராகப் பிறப்பது அரிது’ என்று பாடிய அந்தப் புனிதர் சுண்டெலியைப்போல் வாழ்ந்து, அல்லல் படாதவர் போலும்? இந்த லோனாவாலாப் பகுதியில் எங்கு பார்த்தாலும் மாடிவீடும், பங்களாவும்தாம் தென்படுகின்றன; இந்த மழைக்காகச் சுண்டெலிக்கு அங்கு ஒதுங்கிநிற்கக்கூட இடம் கிடைக்கவில்லையே! மழையினின்று நனையாது இருக்க ‘மழைக் கோட்டு’ அணிந்து எல்லோரும் செல்கின்றனர்; ஆயின் சுண்டெலிக்குத் தன் உடம்பை மறைக்கப் போதுமான கந்தல்கூட இல்லை — குளிரால் உண்டான நடுக்கத்தைப் போக்கிக் கொள்ள ஒரு கிழிந்த போர்வை கூட இல்லை! அன்று முழுவதும் பட்டினியால் வாடுவதை, அவன் முகத்தைப் பார்த்தாலே யாவரும் எளிதில் உணரலாம். இருப்பினும் ஒருவாய்ச் சோறு இல்லை அவனுக்கு! அவனுக்கு ஒரு பிடி சோறு போடுவதால் இந்த லோனாவாலாப் பகுதியில் வாழும் யாரும் இவனைப்போல் ஆகிவிடப்போவதில்லை. யார் அவனுக்குச் சோறு இடுவார்கள்? யார் இருக்கிறார்கள்?

இவைகளை எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிட்டான் சுண்டெலி. பசி வயிற்றைக் கிள்ளியது; காதை அடைத்தது, குளிர் உடலை நடுக்கியது; மழை அவன் உயிரையே வாட்டியது.

இந்த நிலையில் தன்னைப் பெற்ற தாயை நினைத்தான் சுண்டெலி. இந்த உலகில் சிலர் வாழ, பலர் வாட நேர்ந்திருக்கும்போது, தன்னைப் பத்துமாதம் சுமந்துவளர்த்து ஆளாக்கி, அனாதையாக ஏன் தன் அன்பு அன்னை விட்டுவிட்டு மறையவேண்டும் என்று தன் மனச்சான்றையே ஒரு முறை கேட்டுக்கொண்டான். தன் தாய் இருந்தால் அவன் இப்படி பசியால்வாட வேண்டியதில்லை; மழையால் நனைய வேண்டியதில்லை; குளிரால் நடுங்க வேண்டியதில்லை; தங்க இடமின்றி, ஒதுங்க வகையின்றித் தவியாய்த் தவிக்க வேண்டியதில்லை; நாய்க்கும், பறவைக்கும் உள்ள இன்பம் கூடத் தனக்கு இல்லையே என்று ஏங்கவேண்டியதில்லை!

இவ்வாறு எண்ணினான் சுண்டெலி. ஆனால் அவன் தாய் இருந்தால் அல்லவா நிலைமையை அவனால் உணரமுடியும்! அவளும் இருந்தால் இவனைப்போல் வாட வேண்டியதுதான்; வதங்கி, தவித்து, அலைந்து, ஏங்கி நடுங்கிச் சிறுகச் சிறுக உயிரைவிடவேண்டியதுதான்!

(4-ம் பக்கம் பார்க்க)

# நாவலர் பாரதியாருக்கு நன்றி!

மலர் 18 ஆண்டுச் சந்தா ரூ. 8. (20—12—59) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 23

கணக்காயர், நாவலர், டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி இந்தக் கிழமை தமிழக மக்களைத் துயரக் கடலுள் தள்ளிவிட்டிருக்கிறது. வாழ்வின் ஒரு ஓரமாகிய முதுமையடைந்தவர்தான் என்றாலும், பிறந்தார்க்கு இறப்பு உண்டு என்பதனை உணர்ந்திருக்கின்றோம், என்றாலும், பாரதியாரின் மறைவு மனதை வாட்டிடச் செய்கிறது.

அதற்குக் காரணம் தமிழ்மொழிக்கும் தமிழகத்திற்கும் அவர் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளே யாகும்.

இன்று போலவே இருபது ஆண்டுகளுக்கு முன்பும் இந்தி வந்துவிடுவேன்—புகுந்துவிடுவேன்—தமிழகத்து மண்ணில் என்று அச்சுறுத்திக்கொண்டிருந்தது. இந்தியுடன் வந்துறும் கேடுகளைக் களைந்துநாட்டுக்கு நலம் விளைக்கவேண்டும் என்ற பெருங் குறிக்கோளோடு அன்றைய தமிழகம் வீறுகொண்டு எழுந்தது. பல்வேறு துறைகளிலும் ஈடுபாடுகொண்டு வாழ்ந்தோரெல்லாம் இந்தி எதிர்ப்பு என்ற ஒரு துறையில் ஒன்றுபட்டு இணைந்து நின்று 'இந்திக்கு இங்கு என்ன வேலை?' என்று போராடினர். அந்தப் போராட்டத்தின் நடுப்புள்ளிகளாக விளங்கியோரில் டாக்டர் நாவலர் பாரதியாரும் ஒருவர் ஆவர்.

கல்லூரி வகுப்பறையில், பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறையில், சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு மேலே கிறுகிறுவென மின்விசிறி சுழன்றாட, விரித்த ஏட்டில் தெரித்த செய்தி இது என்று நீட்டி முழக்கி 'ஆராய்ச்சி' செய்துகொண்டு, "இதுவே இன்பம்—ஈடு இதற்கு ஏது" என்று இருந்திருக்க வேண்டிய அந்தப் பேராசிரியர் — குகைவிட்டுக் கிளம்பிய புலி எனப் போர்க்கோலங்கொண்டு, ஊரை நாடி, மக்களைக்கூட்டி உரத்த குரலில் உறங்கிடுவோர்க்கும் உணர்ச்சிவரும் வகையில் தமிழின் தன்மையை, அதன் சிறப்பை — அதனை அழிக்கவரும் பகையை —அந்தப் பகையை வெல்லவேண்டிய இன்றியமையாமையை எடுத்துச் சொன்னார். மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தவறாது ஆற்றினார். தமிழ் கற்றதன் கடனைத் தீர்த்தார்!

பகை வந்துற்றபோது—எதிர்த்து ஈடுகொடுத்து, ஆற்றல் விளைத்து வெற்றிமுரசம் கொட்டியது போலவே அமைதியான முறையிலும் அவர் ஆற்றிய தொண்டினைக் கண்டு வியக்கின்றோம்.

களை எடுப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் புதிய செடிகளையும் தோற்றுவிப்பதுதான் தோட்டத்திற்குப் பொலிவைத் தரும். தமிழ்க் கழனியில் தவறி முளைத்த களைகளைக் கல்லி எறியும் பணியாகிய அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியதோடு, புதிய நூல்கள் படைத்தளித்துத் தமிழ் இலக்கிய உலகினுக்குத் தம்மால் ஆன தொண்டினை ஆற்றியுள்ளார்.

அவரோடு நாம் பல நேரங்களில் கருத்து மாறுபாடு கொண்டிருந்தது உண்மை. அந்த நேரங்களில் எல்லாம் அவருடைய புலமைத் திறமையையும் பண்பின் மேம்பாட்டையும் கண்டு வியந்து பாராட்டியது உண்டு. கருத்து வேறுபாடு என்பது நாகரிகம் விளைத்துள்ள நல்ல முறை. அப்படி ஏற்படும் கருத்து வேறுபாட்டைத் தாங்கிக் கொள்ளும் முறைதான் நாகரிகத்தின் அளவுகோல் எனலாம். அந்த நாகரிகம் நனி நிரம்பி வழிந்தது பாரதியாரிடம்.

சமயம் போன்ற துறைகளில் பழமைப்பற்று காரணமாகக் காலத்தோடு ஒட்டாத சில கருத்துக்களை அவர் கொண்டிருந்தாரேனும் தமிழ்மொழிக்கு ஆபத்து, தமிழர்க்குக் கேடு, தமிழ்நாட்டுக்கு ஆபத்து என்ற நிலைமைகள் உருவானபோது வீறுகொண்டு எழும் வேங்கைபோல் களம் நோக்கி எழும் வீரராகத்தான் அவர் விளங்கிவந்தார். இன்று சிலர் ஏதேதோ போர்வைகளை இழுத்து மூடிக்கொண்டு அதற்குள் ஒடுங்கி வாழ்பவர்போல் வாழ்ந்தவர் அல்லர் அவர். அந்த முறையில் தமிழ் காத்த வீரன் என்ற முறையில் அவர் மறைவு தமிழகத்திற்குப் பேரிழப்பு என்பதிலே ஐயமே இல்லை.

புத்துலகக் கருத்துக்களைக் கொண்டோர் மாணாக்கர் படையை அவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இருந்தபோது படைத்தளித்திருக்கின்றார்.

"மாண்டார் அவர்" என்று மனம் துவண்டு விடாமல் செல்லும் நெறியில் சிறிது நேரம் நின்று கண்ணின் நீரைத் துடைத்துக் கடமையாற்றல்வேண்டும். அவர் உழைத்த நெறியில் பாடுபட மனம் கொள்ளவேண்டும்.

இந்தி இந்த நாட்டுக்கு ஆகாத மொழி — அது நமக்குக் கூடாது—வேண்டாம் என்று தமிழகத்தின் மூலை முடுக்குகளில் முழங்கினார் அவர். அந்த இந்திப் பகை இன்றும் வருவேன் வருவேன் என்று ஒதுங்கியும் பதுங்கியும் அச்சுறுத்துகின்றது. அதைத் தொலைப்பதற்கு ஆற்றும் பணியே நாவலருக்கு நாம் செலுத்தும் நன்றி என்பதைத் தமிழக மக்கள் குறிப்பாகப் புலவர்கள்—சிறப்பாகத், தாங்கள்தான் தமிழ் மொழியின் காவலர்கள் என்று கூறிக்கொள்வதிலே தனி இன்பம்—"தமிழின்பம்" கண்டு, இன்னும் காணலாமா—அப்படியொரு வாய்ப்பு உண்டாகுமா என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் உணரவேண்டும். நாவலர் பாரதியாருக்குச் செலுத்தும் நன்றியாக இது அமையட்டும்.

வாழ்க பாரதியாரின் புகழ்!
வளர்க அவர்தம் தொண்டு!

2-ம் பக்கத் தொடர்ச்சி

அன்னையை நினைக்கும்போதே அவனையும் அறியாமல் அழுதே விட்டான். இவன் அழுகையைக் கண்டு வானமும் 'ஓ'வென அழுது மழைத்துளிகளைச் சிந்தியது!

'விர் விர்'ரென்று கார்கள் பறந்தன; சேற்றையும், சகதியையும் வாரி இறைத்தபடி கண்ணை மூடிக்கொண்டு சென்றன. தன்மேல்வந்து அடித்த சேற்றையும், சகதியையும் சுண்டெலி பொருட்படுத்தவில்லை. அவனுக்கு வேண்டியது, என்ன தெரியுமா? அவனைப்பற்றி நினைக்க ஒரு உயிர் தேவை!

"தாத்தா!"

யார் அழைப்பது?...!...? தன்னையா அழைப்பது?...! தான் கேட்ட குரல் மனிதக் குரல்தானா?... அல்லது.........

சுண்டெலியை அழைத்தது ஒரு குழந்தையின் குரல்! அழகனின் குரல்!! தனக்காக யார் இருக்கிறார்கள்?... தன்னை நினைக்க யார் இருக்கிறார்கள்? ... என்றெல்லாம் சற்று முன்பு புலம்பினானே, அதற்காக ஒரு குரல் அவனைத் தேடி வந்தது! தன் அன்னையே, அந்த அழகன் வடிவத்தில் வந்திருப்பதாக அவன் நினைந்தான். தன்னையே ஒருமுறை கிள்ளிப் பார்த்துக்கொண்டான்; வலிக்கவில்லை! உடம்பெல்லாம் விறைத்துக் கொண்டதால் வலிக்கவில்லை! அவன் இதை உணர்ந்தான். தினமும் தனக்காகக் காத்திருந்து சோறு இடும் அந்தக் கோடி வீட்டு அழகன்தான் வந்திருக்கின்றான்! சுண்டெலிக்கு பெரும் வியப்பு!

சற்று முன்பு தனக்காக யாரும் இல்லையே என்று ஏங்கியவன், இப்போது தனக்காக இந்தக் குழந்தை அழகன் இருப்பதைத் தனக்குச் சோறிட்ட கையை மறந்துவிட்டோமே என்று வருந்திக் கண்ணீர் விட்டான்.

"தாத்தா!...நீங்க ஏன் தாத்தா சோறு வாங்க வரலே?" மழலை மொழி சிந்தின அழகனின் செவ்வாய். சுண்டெலியின் மனதிலும், காதுகளிலும் தேன் பாய்ந்தது. தன் உயிர்க்காக வாடுகின்ற குழந்தைத் தெய்வமும் உள்ளதே! இதை நினைந்து நினைந்து அவன் நெஞ்சம் இன்பத்தால் மூழ்கியது. கண்களின் ஓரங்களில் நீர் முத்துக்கள் அரும்பிக் கன்னங்களின் வழியே ஓடி, உருண்டு, உடைந்து, சிதறின!

சற்று முன்பு தன் உயிரையே வெறுத்துக் கொண்டவன், இப்போது உயிரின்மேல் சற்றுச்சபலம் ஏற்பட்டுவிட்டது! அழகனின் ஆசை வார்த்தைகள் கேட்டாலே போதும் என ஆகிவிட்டது.

"ஏன், தாத்தா... அழறீங்க?" கனிவான குரலில் அழகன் சோர்வோடு கேட்டான். தன்னைப்பெற்ற தாய் இல்லையே எனக் கதறிய சுண்டெலிக்கு, அழகனின் அந்த ஒரே சொல்—தனக்குத் தாய் இல்லாத குறையைப் பூர்த்தி செய்துவிட்டது! மக்களுக்காக அழுகின்ற தாயை அவன் கண்டிருக்கின்றான்; கேட்டிருக்கின்றான். பிறர்க்காக அழுகின்ற மக்களை — மனிதர்களை அவன் காணவில்லை;—கேட்டதும் இல்லை! ஆயின் பிறர்க்காக அழுகின்ற குழந்தையை — பிறர்க்காக ஏங்கும் பிஞ்சு நெஞ்சத்தை-தனக்காகப்பரிவோடு வந்துஏக்கத்தோடு கேட்டிடும் மழலைத் தெய்வத்தை— இதோ இன்றுதான் அவன் நேரில் காணுகின்றான்! அழகனின் அந்த அன்பு வார்த்தை ஒன்றேபோதும்! இதை அவன் எப்படி மறப்பான்? நெஞ்சம் புல்லரித்தது. தன்னைக் காணாது கார்கள்—தன்னை நினையாத இந்தப் பகுதி மக்கள்—விடாத மழை—நடுக்கும் குளிர்—யாவற்றையும் ஒரு கணத்தில் மறந்தான.

"தாத்தா!... தாத்தா!... பேச மாட்டீங்களா?... எம்மேலே கோவமா?... என்னை 'டு' விட்டுட்டீங்களா?... தாத்தா...!" ஏங்கித் தவித்த அழகனின் குரல் தழுதழுத்தது.

அழகனின் குரல்சுண்டெலிக்குக் கேட்டது. ஆயின் சுண்டெலியால் வாய்திறந்து பேசமுடியவில்லை—வாய்திறக்க முடியவில்லை. தன் அன்னையின் உருவம் தன் எதிரில் தோன்றியதுபோலவும், தன் அன்னையின் குரல்தாம் கேட்பது போலவும் உணர்ந்தான்.

பெய்த மழை நின்றது. ஊதல் காற்று மட்டும் நிற்கவில்லை.

ஒடுங்கி மரத்தோடு மரமாக நின்ற சுண்டெலி 'தடா'லென அடி பெயர்ந்து நெடுமரம்போல் வீழ்ந்தான்!

"ஐயோ!... ஐயோ!!... தாத்தா விழுந்துட்டாரே!..." அழகனின் அலறலுக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. 'விர் விர்'ரென்று கார்கள் மட்டும் பறந்தன, இவன் அலறலைப் பொருட்படுத்தாமல்.

தாத்தாவைப்பற்றித்தன் அம்மாவிடம் சொல்ல ஓடினான்; சிட்டாகப் பறந்தான். வழக்கமாகச் சோறு வாங்கத் தன் வீட்டை நாடும் சுண்டெலி வராததால், அழகன் அவனைத் தேடி இந்தத் தூங்குமூஞ்சி மரத்திற்கு வந்துவிட்டான். சுண்டெலி மழைக்காக ஒதுங்கும் இடம் அதுவே. சுண்டெலி தாத்தாவின் நிலையை அறிந்ததும் தன் வீட்டை நாடி ஓடினான்.

எதிரே வந்த கார் அவன்மீது பாய்ந்தது! அவனைத் தேடிவந்த அவன் அம்மா ஓடி அவனை எடுப்பதற்கு முன்னம் கார் நின்றது; அழகனைத் தூக்கி ஒரு ஓரமாக வீசி எறிந்தது. அழகன் நினைவிழந்து விழுந்தான். உடனே மருத்துவ நிலையத்திற்கு எடுத்துச் சென்று சிகிச்சை செயயத் துரிதமாக ஏற்பாடாகியது.

அடுத்த நாள் காலையில் லோவைவாலாப் பகுதியின் நகராண்மை வண்டி வந்தது. கீழே விழுந்து இறந்துபோன சுண்டெலியை மரியாதை அடக்கம் செய்யத் தூக்கிச் சென்றது! உயிரோடு இருந்த சுண்டெலியை கவனிக்க யாரும் இல்லை! உயிர்விட்ட சுண்டெலியைச் சுமக்க வண்டி வந்தது!! என்ன கொடுமை?

உயிர்க்குச் சேதமில்லாமல் ஊமைக் காயத்துடன் புரண்டு புரண்டு படுத்த அழகனால் சுண்டெலியை மறக்க முடியவில்லை.

"அம்மா!...சுண்டெலி தாத்தா எங்கேம்மா?" பரிவோடு கேட்டான் அழகன்.

"அந்தப் பிச்சைக்காரனைத் தாலேதான் உனக்கு இந்தகதி. அவன் செத்து தொலைஞ்சான்; சனியன்" எரிந்து விழுந்தாள் அந்த புண்ணியவதி!

ஆயின், சுண்டெலிக்காக அழகன், தன் நெஞ்சில் ஒரு இடம் ஒதுக்கிவைத்திருந்தான்! அந்த இடத்தில் அவன் என்றும் வாழ்வான்; செத்தும் சாவாமல் வாழ்வான்! அழகனுக்காகச் சுண்டெலி செய்தது ஒன்றும் இல்லை! ஆயின் சுண்டெலிக்காக அழகன் சோறு இட்டான்! சோறு இட்டகை சோறு வாங்கிய கையை மறக்குமா?

★

# கொஞ்சும் குழந்தைகள்

[ச. இராசகோபாலன்]

பிரதமர் நேரு அவர்கள் பிறந்த தினம்—பாரெங்கும் உள்ள குழந்தைகள் தினமாம்! நல்ல செயல்தான்... தன் பிறந்தநாளை நாட்டின் எதிர்காலச் செம்மல்களின் இனபநாளாகக் கொண்டாடுவதில் தனி இன்பத்தைக் காண்கிறார் நேரு அவர்கள்.

இன்றைய குழந்தைகள் நாளை இந்நாட்டை ஆளப்போகும் தலைவர்களாகக்கூட வரமுடியும்! நாட்டின் காவலர்கள், எண்ணற்ற மேதைகள் — அனைவருமே குழந்தைப் பருவம் கடந்துதான் கொலு மண்டபம் வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல; "யாழினிது குழலினிது என்பர் தம்மக்கள் மழலைச்சொல் கேளாதவர்"—என்றார் வள்ளுவப் பெருந்தகை. அத்தகைய மழலைகளின் இன்பநாளைக் கொண்டாடுவதில் எல்லோர்க்கும் மகிழ்ச்சிதான்...!

மனித சமுதாயம் காணும் எதிர்காலக் கனவுகள் அனைத்தும், இன்றைய மழலைகளைக் கொண்டே நிறைவேறுகின்றன.

"என்னதான் செல்வம் இருந்தபோதிலும் குலக்கொழுந்தொன்று இல்லையே" என்ற ஏக்கம்கொண்ட தம்பதிகள் இன்னும் ஏராளமாகத்தான் உள்ளனர்.

அரச மரம் முதல் ஐயனார் கோயில் உள்ளிட்ட அத்தனை தேவதைகளுக்கும் ஆறுகாலப் பூசைகள் நடத்தித் தன் அடிவயிற்றை யாருக்கும் தெரியாமல் தொட்டுப்பார்த்துக்கொள்ளும் 'பாபாத்மாக்களும்' நாட்டில் ஏராளம் உண்டுதான்!

ஒன்றா இரண்டா, இப்படி ஆண்டுக்கொரு அவதாரம் எடுத்துக்கொண்டிருந்தால் அவனியில் வாழ்வது எப்படி? என்று வாழ்க்கையை வெறுப்பாக்கிக்கொள்வோர் தொகையும் ஏராளமாகத்தான் இருக்கிறது.

●

அம்புஜத்தின் குழந்தைக்கு காய்ச்சல் கண்டுவிட்டது. துள்ளி விளையாடிக்கொண்டிருந்ததுதான். சொர்ணவிக்ரகம் மாதிரிதான இருந்தது — இப்போது துவளுகிறது, காய்ச்சல் வேதனை தாங்காமல். இதுவரையில் காய்ச்சல் அம்புஜத்திற்குதான் இருந்தது-இப்போது அது குழந்தையையும் பற்றிக்கொண்டது.

அப்போதே டாக்டர் சொன்னார், "தாய்ப்பால் குழந்தைக்கு ஆகாதென்று. என்ன செய்வாள் அம்புஜம்? கணவன் சம்பாதிப்பது கடன் கொடுத்துத் தீரவில்லை. பால் கடன் பாக்கி நிற்கவே அவனும் பால் கொடுப்பதை நிறுத்திக்கொண்டான்.

வேறு வழியில்லாமல் டாக்டர் போட்ட தடையுத்தரவை மீறிவிட்டாள். அவ்வளவுதான், வேதனை உருவெடுத்து மேலும் வாட்டியது அம்புஜத்தை.

தன் மருந்துக்கே காசின்றி அவதிப்பட்ட அவளுக்கு குழந்தைக்கும் சேர்த்து மருந்து வாங்க எங்கே போவாள்?

ஆண்டவன் விட்டவழியென்று, அன்றாடம் ஈசன் சன்னதியில் வலம் வந்தபடி இருந்தாள். கல்லாக இருந்த கருணாமூர்த்தி கண்திறக்க முடியாமல், மூர்ச்சையோடு மளவிற்கு மூச்சுத் திணறிக்கொண்டுதான் இருந்தார்.

...அவருக்குப் பேசும் சக்தியிருந்தாலாவது சொல்லியிருப்பார், "மடையர்களே! மதிகெட்டவர்களே!! அம்புஜத்தின் குழந்தைக்கு இந்தப் பால் கிடைக்காததால்தான் காய்ச்சல் கண்டுவிட்டது—அம்புஜம் பெற்றதுபோல் ஆயிரக்கணக்கில் பாலின்றி வாடும்போது என் தலையில் ஏன் பாலைக் கொட்டி நாசப்படுத்துகிறீர்கள்"—என்று. அம்புஜம் குழந்தையும் நாளாவட்டத்தில் நோய்முற்றி ஆண்டவனிடம் அடைக்கலமாகியது.

அன்றைய தினம்தான் குழந்தைகள் தினவிழாவில்—அம்புஜத்தின் அடுத்தவீட்டுக் கோகிலத்தின் "கொஞ்சும் குழந்தைகள்" பற்றிய சொற்பொழிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

"குழந்தைகள்தான் நாட்டின் செல்வங்கள்... நமது பிரதமா நேரு குழந்தைக்குச்சமமானவர். குழந்தைகள் என்றால் அவருக்கு நன்றாகப் பிடிக்கும்..." என்று ஆரம்பித்த கோகிலம், என்னென்ன ஆகாரங்கள், எப்படியெப்படிக் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்த்தால் குழந்தைகள் நன்கு வளரும் என்று; தான், தன் குழந்தைக்கு ஊட்டிய ஆகார வகைகளின் அடுக்கு வரிசையைத் தந்தார்கள்.

ஆர்லிக்ஸ், ஒவல் கிளாக்சோ மற்றும் தனது வீட்டு மொட்டை மாடியில் — நிலாமுற்றத்தில் — வெள்ளிக் கிண்ணத்தில், சிரகச் சம்பா அரிசிகொண்டு வடித்தெடுத்த சிறு சோற்றில் நல்ல உயர்ந்தவகைப் பருப்பிட்டு, நெய்யூற்றிப் பக்குவமாகக் குழந்தைக்கு ஊட்டிய விதத்தையும் சொன்னார்கள் கோகிலம்.

அதைக்கேட்ட அங்கிருந்த சிறார்கள் நாவில் நீர்தான் ஊற்றெடுத்தது.

இவைகளையெல்லாம் கேட்ட அம்புஜத்தின் வாய் முணுமுணுத்துக்கொண்டது.

அவளின் குழந்தை கொடுத்து வைத்தது!! கொலுமண்டபம்வரை கொண்டுசெல்லத் தகுதிபெற்றதுதான். கோகிலம் கொடுத்து வைத்தவள்..... வசதியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பவள். தன் குழந்தையின் கன்னங்கள் ஆப்பிள் மாதிரி உள்ளதற்குக் காரணத்தைச் சொல்லிப் பூரித்துப் போகிறாள் சபையில்!

ஆர்லிக்சும், ஒவலும், கிளாக்சோவும் வீதியில் கிடக்கும் பொருளா? வெறும் பால் வாங்கித்தரவே பணமற்று வாடும் மக்கள் மத்தியில் ஆப்பிள் கன்னங்கள்கொண்ட சிசுக்களை எங்கே காணமுடியும் என்று அவளையே கேட்டுக்கொண்டாள். வந்த சிரிப்பையும் அடக்கிக்கொண்டு, உதட்டையும் கடித்துக்கொண்டாள், அம்புஜம்.

●

அடுத்த வாரம் திரையிடப்பட்ட செய்திப்படத்தில் கோகிலத்தின் குழந்தையைக் "கொஞ்சும்குழந்தைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டுக் காட்டினார்கள்.

கோகிலம் போன்றவர்களுக்குக் கொஞ்சும் குழந்தைகளாக இருக்கும் நிலையும், அம்புஜம் போன்ற அபலைகளுக்கு அஞ்சும் குழந்தைகளாக இருப்பதற்குக் காரணமும் இல்லாமலில்லை. சமூக ஏற்றத்தாழ்வுகளும், அதன் காரணமாக உள்ள வறுமையின் கொடுமையும்தான் என்று சொல்லத் தேவையில்லை—நாட்டின் நிலை நன்கு தெரிவிக்கும். "கொஞ்சும் குழந்தைகள்" விழாக்கொண்டாடும் இந்த நேரத்திலாவது ஆட்சியாளர்கள் இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்பதுதான் நம் ஆவல்!

# கண் திறந்தது!

வரலாற்றுச் சுருக்கம்

ஜாக் லண்டன்

சில மற்றவன்; சந்துமுனைச் சிந்துபாடி — நாடோடி; நயவஞ்சகன்—காலாடி; குறும்புக்காரன்—இப்படிப் பலபட்டங்களுக்குரியவன் அந்த வாலிபன். அவனது குறும்புத்தனத்தையும், தகாதசெய்கைகளையும் கண்ட போலீஸ்காரர் ஒருவர் அவனை நீதிமன்றத்தின் கூண்டிலே நிறுத்தினர். அவனது நடத்தையையும், தகாத செய்கையையும் நீதிபதியிடம் தெரிவித்தார். குற்றங்களைக் கேட்ட நீதிபதி அந்த வாலிபனுக்கு ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

தண்டனை பெற்ற அந்த வாலிபன் சிறைக்கூடத்தில் கல்லுடைத்தான். கடும் வேலைகள் புரிந்தான். உண்ண ரொட்டியும், குடிக்கத் தண்ணீரும் தான் சிறையிலே அவனுக்குக் கொடுத்தனர். முப்பதுநாள் வரை சிறையிலே வாடினன், வதங்கினன்.

பத்தொன்பது வயதில் சிறைக்கூடத்திலே வாடிய அந்த நாடோடி, இருபத்து ஐந்தாம் வயதில் உலகம் புகழ உயர்ந்தான்! நாடோடி நல்லவனானன்! சீலமற்றவன் சிந்தனைச் சிற்பியானன்! காலாடி காவியம் படைத்தான்! அவனைப் பத்திரிகை உலகம் பாசத்தோடு பார்த்தது! ஆசிரியர் உலகம் ஆர்வமூட்டியது! எழுத்துலகம் ஏற்றம் பெற்றது! எழுதினன். எழுதிக்கொண்டே இருந்தான்! இருபது நாளில் எழுதி முடிக்கக்கூடிய நாவலை ஒரே நாளில் எழுதி முடிக்கும் அத்தனை ஆற்றலைப் பெற்றன். பத்தொன்பது வயது வரை நாடோடியாகத் திரிந்தவன், இறக்கும்பொழுது ஐம்பத்தொரு புத்தகங்களைப் படைத்துவிட்டு மறைந்தான்!

அவன் இவ்வுலகை விட்டே மறைந்தான். மண்ணோடு மண்ணுகி விட்டான். ஆனால் அவன் எழுதி விட்டுச் சென்ற—அவன் படைத்த இலக்கியக் கருவூலங்கள் அவன் புகழை இன்றும் பாடிக்கொண்டிருக்கின்றன. இத்தகு நல்லவன்தான் ஜாக் லண்டன்.

ஜாக் லண்டன் எழுதிய தலைசிறந்த படைப்பு "கானகதின் குரல்" (The call of the wild) என்ற நவீனமாகும். இந்த நவீனம் ஏறக்குறைய இருபதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. முப்பது இலட்சத்திற்கு அதிகமான பிரதிகள் விலையாகியிருக்கின்றன. இந்த அரிய நூல் உலகப் புகழ் பெற்ற நூல்களின் வரிசையில் இடம்

ஆர். வைத்தியலிங்கம்

பெற்ற ஒன்று! இந்த நவீனத்திற்கு ஜாக் லண்டன் ஈட்டிய தொகை மிகக் குறைவு. ஆனல் பதிப்பாளர்களும்; பட முதலாளிகளும் இந்த நவீனத்தின் மூலம் ஈட்டிய தொகை மிக அதிகம்!

ஜாக் லண்டன் தன் இளமைப் பருவத்தில் பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறன். பன்முறை பட்டினி கிடந்திருக்கிறன். வீட்டுக்கு வீடு கைநீட்டிப் பிச்சை கேட்டிருக்கிறன். இரயில் தண்டவாளம் என்றும் பாரான்; குளம் குட்டை என்றும் பாரான்; பூங்கா என்றும், புல் தரை என்றும் பாரான்;—நினைத்த நினைத்த இடங்களில் எல்லாம் படுத்து உறங்குவதில் தன் இளமைப் பருவத்தில் பெரும் பகுதியைச் செலவழித்திருக்கிறன். அவனை நூற்றுக்கு மேற்பட்ட முறைசிறைக் கூடங்கள் வரவேற்கின்றன.

ஜாக் லண்டனின் இளமைப் பருவத்தை வறுமைதான் இந்த அளவுக்குக் கருக்கி இருக்கிறது. பள்ளிக்கூடமா? கேட்டால் சிரிப்பானும்! பள்ளி செல்லாமல் ஊரையும், காடு மேட்டையும் சுற்றித் திரிவதிலேதான் அவனுக்குத் தனி இன்பம்! தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு கடற்கரை, உப்பங்கழி இப்படி நீர் நிலைகளைச் சுற்றி வட்டமிடுவானும்.

இப்படிப்பட்ட ஊர் சுற்றியின் கண் ஒருநாள் திறக்கத்தான் செய்திருக்கிறது.

ஜாக் லண்டன் பத்தொன்பதாம் வயதில், கலிபோர்னியோவில்உள்ள பள்ளியில் சேர்ந்து படிப்பதில் ஊக்கம் செலுத்தினன். இரவு பகல் பாராது, தூக்கத்தைக் குறைத்துக் கொண்டு படிப்பதில் தன் ஆற்றல் முழுவதையும் செலவழித்தான். தன் நம்பிக்கை குறையாது படித்தான். வெற்றி கிட்டியது! நான்கு ஆண்டு படித்து முடிக்கக்கூடிய கல்வியை மூன்றே மாதத்தில் படித்துவிட்டுக் கல்லூரிப் படிப்புக்குக் கால் வைத்தான்.

ஒருநாள் ஜாக் லண்டன் படிப்பதற்காக நூலகம் ஒன்றை நாடினன். "ராபின்சன் குருசோ" (Robinson cruso) என்ற நூலை வாங்கிப் படித்தான். இந்நூல் அவன் உள்ளத்தை ஈர்த்தது! படித்தான். படித்துக்கொண்டே இருந்தான். ஊர் சுற்றி இன்பம் கண்ட அவனுடைய உணர்வு படிப்பதிலே இன்பம் காணும் வெறியாக மாறியது. சுற்றித் திரிவதிலே போட்ட அவன் நடை, படிப்பகத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. வயிற்றுப்பசி அவனை வாட்டவில்லை. அறிவுப் பசி அவனை வா வா என்றழைத்தது. நாள் ஒன்றுக்கு பதினைந்து

(9-ம் பக்கம் பார்க்க)

# வாழத் தெரிந்தவள்

வி. ஆர். துரை

"இன்றிரவுசரியாகப்பத்துமணிக்குக் 'கோவலன்' என்ற நாடகம், அதிவிமரிசையாக நடைபெறும்" என்று நோட்டீஸ் முழங்கியது. இப்பொழுது மணி பதினொன்று. விசிலடிக்கும் படலத்தில் மகாஜனங்கள் தீவிரமாக இறங்கினார்கள். தவளையைப்போல் ஒலி செய்து செவிக்கு உணவு தந்தார்கள்; சகிக்க முடியவில்லை. தொங்கிக்கொண்டிருந்த ஒரு சாதாரணத் திரைச்சீலை, குளிர் காற்றிலே அசைந்தாடி அழுதுகொண்டிருந்தது.

நேற்று இராணி லலிதாங்கி. அதற்கு முன் தினம் தூக்குத் தூக்கி. இரண்டு இரவும் டிராமாக் கொட்டகை நீட்டிப் படுத்துவிட்டது. இன்றிரவு நல்ல கூட்டம். கொட்டகையே பிடிக்கவில்லை.

சென்னை மாநில சினிமாப் புகழ் சிங்கார நடிகை குமாரி நீலாதேவி, இன்றைய கோவலன் நாடகத்தில் மாதவியாகும். அப்படித்தான் விளம்பரம்செய்து துண்டு நோட்டீசில் அவளின் உருவத்தையும் காட்டி இருந்தார்கள். எவளோ ஒருத்தியின் கவர்ச்சியான படத்தைக் காட்டிக் காசுபறிக்கும் நற்பழக்கமும் உண்டல்லவா! அந்த அழகியின் ஆடலையும் பாடலையும் கண்டு களிக்கப் படையெடுத்த மக்கள் கூட்டம், பலமாக நாடகக் கொட்டகையின் உள்ளே முற்றுகையிட்டிருந்தது.

இன்னும் பதினைந்து நிமிடத்திற்குள் ஜோராக நடகம் ஆரம்பமாகிவிடும். பிரபல நடிகைகள் முகத்தில் பவுடரை ஏற்றி முடித்துவிட்டுத் தவமிருந்தனர். கோடையிடி கோவிந்தசாமி, தபேலாடோலக்கைத் தட்டித் தட்டிச் சரிபடுத்திக்கொண்டிருந்தார். சினிமா பின்னணிப் புகழ் ஆர்மோனிய சக்ரவர்த்தினியாகிய சரசுவதி தேவி வந்துவிட்டாள். திரைச் சீலையை இன்னும் தூக்கவே இல்லை. மாபெரும் மக்கள் வெள்ளத்தில் சிறிது சலசலப்பு—பாடகியைப்பற்றி அசிங்கமான விமர்சனம்—திடீரென்று ஒரே கூச்சல் — பாட்டுத்தான்! அதைத் தொடர்ந்து மக்களின் ஆரவாரம் விண்ணை முட்டவே, உடனடியாகச் 'சீன்' அகற்றப்பட்டது. கல்பறந்து வந்து உடம்பைக்காயப்படுத்தினால் என்ன செய்வது!

கொட்டகையின் உள்ளே நுழைந்த அய்யாசாமியின் கண்கள் அலைந்தன. கண்ணோட்டம் முடிந்தது. முதல்வகுப்பு நாற்காலியில் போய் விழுந்தார். மூட்டைப்பூச்சிகள் கத்தின! எப்பொழுது உள்ளே வரவேண்டும் என்று அவருக்குத் தெரியும்!

கோவலனுக்கும் கண்ணகிக்கும் கதைப்படி, மேடையிலே இன்பமாகக் கல்யாணம் முடிந்துவிட்டது. இப்பொழுது மாதவி வந்து, கையை ஆட்டி கழுத்தை வெட்டிக் கண்ணைக் காட்டி ஆடிப்பாடி, மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்ள வேண்டும். பார்வையாளர்களின் ஆர்வம் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்தது.

மாதவி தோன்றினாள்! நடிகை நீலாதேவி மேடையை அலங்கரித்தாள். குயிற்பறவை போன்று இனிமையாகக் குரலெடுத்துப் பாடினாள். தோகை விரித்தாடும் மயிலைப்போல் அற்புதமாக ஆடினாள். கண்களுக்குக் குளிர்ச்சியாகவும் கவர்ச்சியாகவும் அவளின் நடனம் இருந்தது. அவ்வளவு சிறப்பாக அந்தப் பாத்திரத்தில் அவள் நடித்தாள். பாடலின் கருத்துணர்ந்து அபிநயம் பிடிக்கும் வித்தையிலே, கெட்டிக்காரியாக இருந்தாள். எல்லோரும் அவளின் நாட்டியக் கலையைக்கண்டு, கவலையை மறந்தார்கள். வாலிபர்களைத் தம்முடைய பேரழகால் சுண்டி இழுத்துத் தத்தளிக்கச் செய்தாள், நடிகை நீலா.

மயிலின் ஆட்டம் முடிந்தது. பம்பரம்போல் ஆடுவதை நீலா நிறுத்தினாள். ஆரவாரமும் கைதட்டலும் வானைப் பிளந்தது. கட்டழகியின் உள்ளம் சில்லென்று குளிர்ந்தது. அபாரமான அவள் நாட்டியத்தை விட, மயக்கும் அந்தப் பெண்ணின் அழகு மணவாளனைச் சொக்க வைத்தது.

நீலாதேவி, பறந்து சென்று மறைந்துவிட வேண்டிய கட்டம் வந்துவிட்டது. எப்படி மக்களால் அந்தப் பெரிய துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளமுடியும்? பாட்டொன்று பாடவேண்டுமென்று முழங்கினார்கள். அபிமானிகளின் கூக்குரலை நீலா அலட்சியம் செய்ய முடியுமா? மைக்கின் முன்னால்வந்து ஒயிலாகத் தலைகுனிந்து நின்றாள். என்ன நாணமா? எங்கிருந்து எவ்வாறு எந்தவழியாய் அந்த நாணம் வந்தது?

வெற்றிகரமாகப் பாடி முடித்தாள். அதிகமாகப் பரிசு வழங்கித் தன்னை, விளம்பரம் செய்துகொண்டவர் அய்யாசாமிதான்! குறி பார்த்துக் காளையர் சிலர் வீசிய ரூபாய்கள், அவள் மேலேயே வந்து

விழுந்தன. வந்த சினத்தை முகத்தில் அவள் காட்டிக்கொள்ளவில்லை; 'பொறுத்துக்கொண்டாள். அவ்வளவும் பணமாயிற்றே! அய்யாசாமியை முறைத்துமுறைத்துப் பார்த்தபடி இருந்தான் மணவாளன். போட்டி! கோபம் அவன் பார்வையில் கொப்பளித்தது; பல்லைக் கடித்தான்.

'ஒன்ஸ்மோர்' தொல்லை காதைக் குடையவே, சிரித்துக்கொண்டே, உள்ளேபோய்விட நீலா மயில் நடை நடந்தாள். வில்லிலிருந்து பறக்கும் அம்புபோல், முரடர்கள் சிலர் மேடையின்மேல் பாய்ந்தார்கள். கையிலிருந்த தடியால் விளக்குகளின்மீது ஓங்கி அடித்து, தூள்தூளாக உடைத்தார்கள். வெளிச்சம் இருந்த இடமெல்லாம் இருள் கப்பிக்கொண்டது. மக்களிடையே ஒரே அமளிதுமளி—பெரிய கூச்சல்! நாற்காலிகளும் பெஞ்சுகளும் உருவிழந்துவிட்டன! சுற்றிலும் கட்டியிருந்த ஓலைகள் சூறையாடப்பட்டன. கையில் நாடக முதலாளி கிடைத்திருந்தால் அநியாயமாக அவன் கைகாலை முறித்துவிட்டிருப்பார்களோ என்னவோ!

கோவலன் வேடத்தில் நடித்த அப்பாவி நடிகர், சிறிது தூரம் மாதவியின் பின்னல் ஓடிக் களைத்துப் போய்த் திரும்பிவிட்டார். நீலாவை அலக்காகத் தூக்கிக்கொண்டு, முரடர்கள் இருளில் ஓடிக்கொண்டிருந்தார்கள். மணவாளனின் சால்கள் காவல் நிலையத்தை நோக்கி ஓடின.

இருள் விழுங்கிக்கொண்டிருந்த அந்தப பகுதியை தார்ச்சாலையின் வளைவில் வேகமாகத் திரும்பிய கறுப்பு-க்கார் பகலாக்கியது. நீலாவை அப்படியே தரையில் போட்டுவிட்டு, இருளில் கயவர்கள் ஓடி ஒளிந்தனர். கர்ணகடூரமாகச் சத்தம் எழுப்பிக்கொண்டு, கார் அவள் தலையருகில் நின்றது. நல்லவேளையாகச் சக்கரம் அவள் தலையை நசுக்கி ஏப்பம்விடவில்லை.

'மாதவி சார்!'' கத்தினன் வேலைக்காரன்.

''யாரது? ஒரு பெண்ணு!'' டிரைவர் சீட்டிலிருந்து இறங்கி ஓடி வந்தார் அய்யாசாமி.

''அதாங்க மாதவி'' கை மின் விளக்கை அவள் முகத்தில் அடித்தார்.

''யார் நீலாவா!''

''ஐயயோ, பாவமுங்க!'' வாயிலிருந்த துணியை எடுக்கச் சென்றவனை அதட்டிவிட்டு, அய்யாசாமியே மெதுவாக எடுத்தார்.

''அயோக்கிய ராஸ்கல்கள்! கிடைத்திருந்தால் இந்தத் துப்பாக்கியாலேயே சுட்டுத்தொலைத்துவிட்டிருப்பேன்! மடைப்பயல்கள்! இப்படியா செய்வது?''

'என்ன அக்ரமம் இது! இவ்வளவு மோசமான ஊரென்று தெரிந்திருந்தால், வந்தே இருக்கமாட்டேன்!'' அப்படிச் சொல்லிவிட்டுக் கண்ணீர்விட்டாள்.

''டேய், முருகா!'' காரின் முன் பக்கம் கதவைத் திறந்துகொண்டு வேலைக்காரன் நின்றான். பின்பக்கக் கதவைத் திறக்கச் சொல்லி நீலா ஏறி உட்கார்ந்தாள்.

டிரைவர் சீட்டில் உட்கார்ந்து ஸ்டேரிங்கைப் பிடித்த அய்யாசாமி ஒரு பெருமூச்சு விட்டு விட்டுக் காரைக் கிளப்பினர். பக்கத்தில் குந்தியிருப்பது வேலைக்காரனாயிற்றே! சத்தம் வராமல் அவன் சிரித்துக்கொண்டான்.

பிளைமவுத் ஒரு குலுங்குகுலுங்கி, நவீனமோஸ்தரில் கட்டியிருந்த பங்களாவின் முன்னல் நின்றது. காபியைத் தயாரிக்க முருகன் உள்ளே பறந்தான். படிகளில் நீலா அய்யாசாமியைப் பின் தொடர்ந்து நடந்தாள்; ஓடினாள். நம்மைப்போன்ற கூத்தாடிகளுக்கு, இப்படி ஒரு பெரிய மனிதரின் நட்பு இலேசில் கிடைக்காது என்பது அவளின் எண்ணமா? புன்முறுவல் தவழ்கிறதே முகத்தில்!

துவாலையால் தூசைத் தட்டிவிட்டு, 'உட்காருங்க'' என்று நீலாவைப் பார்த்து அய்யாசாமி வேண்டினர். சோபாவில் உட்காராமல், ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப்போட்டுத் தனியாக உட்கார்ந்தாள். அய்யாசாமியின் முகம் சுருங்கி மீண்டும் மலர்ந்தது. கால்மேல் கால்போட்டு அவள் 'ஸ்டைய்லாக' உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும்போது, மனதில் அவருக்கு எரிச்சலாகவும் இருந்தது.

'என்னடா இன்னும் செய்கிறாய்?'' கர்ஜித்தார்.

''இதோ வந்தேனுங்க எஜமான்!'' காப்பியை அவர் வாங்கி, அவள்கையில் கொடுத்தார்; விரல்களைத் தொட்ட இன்பத்தால் உள்ளம் குதிகுதித்தது.

''எங்கே அம்மாவைக் காணோம்?'' காப்பியைக் குடித்துக்கொண்டே நீலா கேட்டாள்.

''அவ், அம்மா ஊருக்குப் போயிட்டா!'' குரலில் வெறுப்பைக் காட்டினர்.

''கமலா குழந்தையும் உன்னைப் போலவே இருக்குதும்மா. அதையும் ஐயா அம்மாகூடவே அனுப்பிச்சுட்டாரு!'' இப்படி முருகன் சொல்லியதும், அவனை அய்யாசாமி கடிந்து அதட்டி வெளியே அனுப்பிவிட்டார்.

''என்ன அப்படியே இருக்குது?'' குவளையைப் பார்த்து உரிமையுடன் கேட்டார்.

''எனக்குப்பழக்கமில்லிங்க. உங்களுக்காக...'' உள்ளத்தில் ஒன்றுமில்லாமல் கூறினள்.

''ஒரு நடிகைக்குக் காப்பி குடிப்பது பழக்கமில்லையா!'' சிரிப்பைச் சிந்தினள்.

— 'என்னங்க, என்னங்க! அம்மா வந்துட்டாங்க!!''

''யாருடா அம்மாவா? எப்படி?'' எழுந்து நின்று கைகளைக் குத்திக்கொண்டார்.

''எக்ஸ்பிரஸ்ஸில் வந்து, வாடகைக் காரிலே......''

''எப்ப வந்தா...எப்படி வந்தா... தெரியுமே எனக்கு உங்க வேஷம்!'' பிரசன்னமாகிய மனைவி, கணவனைப் பார்த்து முழங்கினள்.

''கமலா எங்கே?'' பயபக்தியுடன் வாயைத் திறந்தார்.

''இந்த இலட்சணத்தை அவ பார்த்துவேற காரித்துப்பணுமா?'' ஊமையாகிவிட்டார் மனிதன்.

''போயிட்டு வாட்டுங்களா!'' சமயம் பார்த்து நீலா சீண்டினள்.

கொஞ்சிக் கொஞ்சிக் குழைந்தவர், திரும்பிக்கூடப் பார்க்காமல், ''முருகா! கூடபோய் விட்டுட்டு வாடா!'' என்று மெதுவாகக் கூறினர். உள்ளுக்குள் அவனுக்குக் கொண்டாட்டம். முரடர்களுக்குக் கூலிகொடுத்து, தூக்கிவரச்செய்த நாடகமும் நடிப்பும், நீலா புரிந்துகொள்ளவே இல்லை என்பது அவர் நினைப்பு!

கிழக்கு வெளுத்துக்கொண்டு வந்தது.

ஆறறிவு மனிதர்களும், அவர்களின் கெட்ட இதயங்களும் நினை

வில் ஓட, நடிகை நிலா மெதுவாக நடந்துகொண்டிருந்தாள். பின்னால் வரும் முருகனைக் கண்ணடித்து அனுப்பிவிட்டு, ஆசை போரிடும் மணவாளன், நிலாவைப் பின் தொடர்ந்தான்.

"தங்களுடன் நான் வரலாமா?"

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த நிலா, முருகன்போய் 'இவர்' எப்பொழுது எப்படி வந்தார் என்று ஒரு கணம் திகைத்து நின்று, பிறகு வழியே நடந்தாள்.

"பேச மனமில்லையா!"

"தனியாகச் செல்ல பயமாகத்தான் இருக்கிறது!" சந்தர்ப்பத்திற்கேற்ற பதிலைக் கூறினாள்.

"போலிஸ் ஸ்டேஷனுக்கு ஓடினேன். சப்இன்ஸ்பெக்டர் இல்லை. போலிஸ்காரர்கள் தூங்குகிறார்கள். கிராமத்தில் இப்படித்தான்!" தான் பட்ட தொல்லையைச் சொல்லிவிட்ட திருப்தி அவனுக்கு உண்டாகியது.

"ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறீர்!" இந்தச் சாதாரண பதில் அவனுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை

"நாடகத்தில் உன் நாட்டியம் கவர்ச்சியாக இருந்தது!" அவள் சிரித்தாள்.

"பேசாமல் சிரித்துக்கொண்டே இருந்தால்......"

"எந்த முறையில் பதில் சொல்வதென்று யோசிக்கிறேன்."

"அந்தக் குழப்பமா உனக்கு! ஆமாம், இந்த நாடகத் தொழில் உனக்குப் பிடிக்கிறதா?"

"பிடிக்குதோ பிடிக்கலையோ, நடித்துத்தானே ஆகவேண்டும்!"

"மனதிற்கு பிடித்த ஒருவரை மணம் செய்துகொண்டு, குடும்பம் நடத்தினால் எவ்வளவோ நன்றாக இருக்கும்!" ஆசை யோசனையாக வெளியே வந்தது.

"சுலபமாகச் சொல்லிவிட்டீர்கள். அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லையே!"

"சரி, போய் வருகிறாயா?"

"ஊம், போகிறேன்"

"அப்பொழுது நான் போகட்டுமா?" திருட்டு எண்ணத்தோடு கேட்டான்.

"போய் வாருங்கள். மறக்க முடியாது உங்கள் உதவியை" கைகளைக் கூப்பி வணக்கம் சொல்லிவிட்டு நடந்தாள்.

"அவ்வளவுதானா......!" சோகமாகக் குரலை இழுத்தான்.

என்னவோ ஒன்றை அவளிடமிருந்து அவன் எதிர்பார்க்கிறான். புரிந்தும் புரியாமல் அவள் நடந்தாள். இன்று அற்ப ஆசைக்குப் பலியாகிவிட்டால்......! நாளை...... நாளை? வளரும் வயிற்றைக்கண்டு ஊர் சிரிப்பாய்ச் சிரிக்குமே! இப்பொழுது குதிக்கும் இவனா, அப்பொழுது ஓடிவந்து மானத்தைக் காப்பாற்றப்போகின்றான்? மானம்! மானம்! அதுதானே பெரிது. மானமிழந்த ஈனவாழ்வு யாருக்கு வேண்டும்? மானத்தைக் காக்க உயிர் போனாலும் போகட்டும்.

நாடகத்தில் நடிக்க மட்டும் தெரிந்தால் போதுமா? உண்மை வாழ்க்கையிலும் ஒழுங்காக நடக்கத் தெரியவேண்டும். இரண்டிலும் கெட்டிக்காரியாக இருந்தாள் நிலா.

என்ன அவன் முகத்தில் இவ்வளவு பெறுப்புக் கொப்பளிக்கின்றதே! ஏமாற்றம் அவன் முகத்தை இத்தனை கோணலாக்கிவிட்டதே!

அய்யாசாமி, மணவாளன் இரண்டுபேருக்கும் ஒரே நோக்கம் — அவளைக் கெடுக்கும் நோக்கம். வெற்றி யாருக்கு? உலகத்தில் வாழத் தெரிந்த அவளுக்குத்தான்!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

மணி நேரம் படித்தான். கார்ல் மார்க்சையும், ஷேக்ஸ்பியரையும் படித்தான். 'டெரசரர் ஐலாண்டு;" "தி டேல் ஆப் டு சிட்டிஸ்;" "தி கவுண்ட் ஆப் மாண்டிகிரிஸ்டே" போன்ற நவீனங்களை ஆய்வுடன் கற்றான்.

விளைவு?

அவன் அறிவுக்கண் திறந்தது! எழுதினான். எழுத்தாளனானான். முப்பதுக்கு மேற்பட்ட கதைகளை ஒரே நேரத்தில் ஏடுகளுக்கு அனுப்புவானாம். ஆனால் அவைகள் யாவும் அவனிடமே திரும்பி இருக்கின்றன. "சான பிரான்சிஸ்கோ கால்" என்ற ஒரு ஏடு பரிசுப் போட்டி நடத்தியது. அந்தப் போட்டியில் ஜாக் லண்டன் கலந்துகொண்டான். "தி டைபூன் ஆப் தி கோஸ்ட் ஆப் ஜப்பான" என்ற தலைப்பில் கதையை அனுப்பி அதற்கு முதற் பரிசு பெற்றான். அதுமுதல் எழுத வேண்டும் என்ற உணர்வு அவனைத் தூண்டியது! எழுதினான். ஆனால் எழுதும் தொழிலில் போதிய வருவாய் கிட்டவில்லை. தனது அறை வாடகை கொடுக்கக்கூடப் போதிய வருவாய் இல்லாமல் வாடியிருக்கிறான்.

எழுத்தாளன் ஜாக் லண்டன் ஹோட்டிலில் வேலை செய்திருக்கிறான். எச்சில் கிண்ணங்களைக் கழுவியிருக்கிறான். கப்பலைக் கழுவும் குடக் குழியில் வேலை செய்திருக்கிறான். தொழிற் கூடங்களில் தொழில் செய்திருக்கிறான். இப்படிப் பல வேலைகள் செய்தும், ஒரு தொழிலிலும் போதிய வாழ்க்கை அமைதி அவனுக்கு கிட்டவில்லை. இறுதியாகத் தன் வேலைகளுக்கு முழுக்குப் போட்டான். இலக்கிய உலகத்தில் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்துவது என்று முனைந்தான், முயன்றான்.

முயற்சி வென்றது!

அடுத்த ஆறாண்டுக் காலத்தில் ஆறு நவீனங்களையும், நூற்று இருபத்து ஐந்து சிறுகதைகளையும் எழுதிக் குவித்தான. மக்கள் எங்கும் அவன் புகழ் பாடினர். அமெரிக்க இலக்கியத்தில் சுடர் விடும் விண்மீனானான். ஜாக் லண்டன் 1916ல் இப்பூவுலகைவிட்டு மறைந்தான். இருபது வயதுக்கு மேல்தான் அவன் எழுத்துப்பணி தொடங்கியது. ஆனால் நாற்பது வயதுக்குள் அவன் எழுதிக் குவித்த நாவல்களும், சிறு கதைகளும் ஏராளம்! நாள் ஒன்றுக்கு **5000** வார்த்தைகளை எழுதக்கூடிய அறிவுத்திறனும், ஆற்றலும் பெற்றவன் ஜாக் லண்டன். ஜாக் லண்டனின் ஆண்டு வருமானம் அமெரிக்க ஜனாதிபதியின் ஆண்டு வருவாய்போல் இருமடங்குக்கு அதிகமாகும். இத்தனை சிறப்பு வாய்ந்த, ஜாக் லண்டனின் கண் திறக்கவில்லை என்றால், அவன் எழுதிய அரிய நவீனமாம் 'கானகத்தின் குரல்' என்ற நூலை நாம் பெற்றிருக்க முடியுமா?

✽

# மதியிழந்தவன்

ஆடுதுறை
**அ. ஹபீப்முஹம்மது**

அன்றும் வழக்கம்போல் என்னுடைய பணியைச் செய்வதற்காக புறப்பட்டுக்கொண்டிருந்தேன். நான் எப்பொழுதும் செல்லும் பாதையிலேயேதான் சென்றேன். காவிரியாற்றின் குறுக்கே போடப்பட்டிருக்கும் மூங்கில் பாலத்தைத் தாண்டித்தான் செல்லவேண்டும். ஆற்றின் ஒரு புறம் வாழைக் கொல்லைகள். மற்றொரு புறம் மனித உடலை எரித்துச் சாம்பலாக்கும் சுடுகாடு. இந்த இடங்களை எல்லாம் தாண்டித்தான் நான் செல்லவேண்டும். அன்றாடம் இந்தக் காட்சிகளைக்கண்ட கண்கள் அலுத்துப்போனதும் உண்டு. இருந்தாலும் நான் அந்தப்பாலத்தைத் தாண்டிதானே செல்ல வேண்டும்

மாலை 6½ மணி இருக்கும். என் வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டேன். அவ்வழியே நான் சென்றபொழுது ஒரு அழுகைக் குரல் கேட்டது. அப்பொழுது இரவு 7 மணியிருக்கும். அதிகமான மக்கள் நடமாடவும் இல்லை. அந்த நேரத்திலே ஒரு தனி நபர் தன்னுடைய மூன்று வயதுச் சிறுவனை அருகில் வைத்துக் கொண்டு அழுதுகொண்டிருந்தார். அவர் அங்கே காணப்பட்ட சமாதியொன்றைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டபடியே புலம்பிக் கொண்டிருந்தார். அழும்போதே "என்னை மன்னித்துவிடு மரகதம் ...நான்பெருந்துரோகம் இழைத்து விட்டேன் உனக்கு. இன்றுதான் உன் பெருமைகளை உணர்கிறேன். அன்றே உணர்ந்திருந்தால் நான் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கமாட்டேன். உணரக்கூடிய தன்மை பெற்றிருந்தால் நான் ஏன் உன் சமாதியில் நின்றுகொண்டு கதறவேண்டும்? மன்னிப்புக் கேட்டாலும் அது உன் செவிகளிலே ஏறவா போகிறது?... மரகதம்... நான் கொடூரம் படைத்தவன்... மதியிழந்தவன்..." என்று கூறிக் கதறி அந்தச் சமாதியைப் பார்த்தவாறே அழுதுகொண்டிருந்தார். அருகிலிருந்த சிறுவனும் அவர் அழுவதைக்கண்டு அழ ஆரம்பித்து விட்டான்.

எனக்கு இவரது செய்கை என்னவோபோல் இருந்தது. ஏன் இந்த நேரத்தில் இடுகாட்டிலே அமர்ந்து அழுது புலம்பிச் சமாதியைக் கண்ணீரால் குளிப்பாட்டவேண்டும்? இவருக்கு ஏற்பட்ட துயரம் என்ன? இதைத் தெரிந்து கொண்டு அவரது உள்ளத்தைச் சமாதானப்படுத்தவேண்டும். இது யாருடைய சமாதியாக இருக்கும்? இப்படியெல்லாம் எண்ணலானேன். அவரது அப்போதைய நிலையைக் காணும் கல்மனம் படைத்தவர்கூட மனம் கரையத்தான் செய்வர். அவர்களே அப்படியிருக்கும்போது இளகிய மனம் படைத்த நான் எப்படி வருந்தாமல் இருக்கமுடியும்? எதுஎப்படியாலும் ஆகட்டும் என எண்ணி அழுதுகொண்டிருக்கும் அந்த நபரிடம் சென்றேன். அவர் நான் அருகில் சென்றதைக்கூடச் சரியாகப் பார்க்கவில்லை. தொடர்ந்து தொண்டை விம்மும் அளவிற்கு அழுதுகொண்டேயிருந்தார்.

நான் அவர் அருகே சென்றதும் அழுகையைநிறுத்திக்கொண்டார். எனக்கோ அவர் துயரத்திற்கான காரணத்தை அறியவேண்டும் என்ற ஆவல். என்றால் இயன்ற வரை அவர் சோகத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம்— இரண்டுக்கும் இடையே அவரை நெருங்கினேன். "நண்பரே... ஏன் இங்கே வந்து அழுது புலம்பிக் கொண்டிருக்கிறீர். நானும் நீண்ட நேரமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். சமாதியைப் பார்த்தவாறே அழுதுகொண்டேயிருக்கிறீர்...என்ன காரணம்" என்றேன். அவர் சற்று என் முகத்தை உற்று நோக்கினார். இருந்தும் நான் சமாளித்துக்கொண்டு "உங்களுக்கு உள்ள துயரைக் கூறுங்கள். என்னால் முடிந்தவரை தீர்த்துவைக்க முயற்சிக்கின்றேன்." என்றேன். அதற்கு அவர் "அந்தத் துயரம் என்னோடேயே இருக்கட்டும். நீங்களும் இதில் பங்குகொள்ள வேண்டாம். எவராலும் என் அமைதியிழந்த உள்ளத்தைச் சமாதானப்படுத்த முடியாது. தயவு கூர்ந்து நீங்கள் போய்விடுங்கள்" என்று கூறித் தன் பையனை அருகில் வைத்துக்கொண்டு கண்களில் நீர் மல்கச் சமாதியை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

அவருடைய அப்போதைய நிலை மிகவும் பரிதாபகரமானதாகவும், பயங்கரமானதாகவும் இருந்தது. மீண்டும் நான் "தோழரே... தயவு செய்து உங்கள் துயரத்திற்கான காரணத்தைக் கூறுங்கள்" என்றேன். அதற்கு அவர், 'நீங்கள் யார்? என்னைப்பற்றித் தெரிந்து கொள்வதில் ஏன் இவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள்?" என்றார். நான் "மனித உள்ளம் படைத்த சாதாரணமனிதன்தான்.

ஏற்படும் துயரங்களைப் பெற்றுக் காது கண்ணீர் வடிப்பவன். தயவு செய்து உங்களது சோகத்திற்கான காரணத்தைக் கூறுங்கள் என்று கெஞ்சும் தோரணையில் கேட்டேன். அந்நண்பர் பிறகுதான் தன் அழுகையை நிறுத்தி என் அருகே அந்தச் சிறுவனையும் தூக்கிக்கொண்டு வந்தார். "அது ஒரு பெரிய சோக காவியம். என் வாழ்வையே மாற்றியமைத்த துன்ப வரலாறு. அதை நான் கூறி உங்கள மனதையும் புண்படுத்தவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்றார். "ஆம். கூறத்தான் வேண்டும். நானும் தெரிந்துகொள்கிறேன்" என்றேன். "நீங்கள் விரும்புவதாலும், என் சோகக் கதையைச் சொல்வதன் மூலம் என் நெஞ்சத்திலே இருக்கிற சுமை ஓரளவு குறையும் என்ற எண்ணத்தினாலும் கூறுகின்றேன்" என்று கூறித் தன்னுடைய கதையைக் கூறலானார்.

"இன்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான், அந்தத் துக்ககரமான சம்பவம் நடைபெற்றது. அதை இப்பொழுது நினைத்தால் கூட என் உள்ளம் வேதனை அடைந்த வண்ணமாகவே இருக்கிறது. நான் வாழை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றில் குமாஸ்தாவேலை செய்துகொண்டு வந்தேன். எனக்கு வரும் சம்பளமோ ரூ. 81. இதைக்கொண்டுதான் நானும், என் மனைவி மரகதமும் குடும்பத்தை நடத்திவந்தோம். குறைவான சம்பளம் வந்தபோதிலும் குறைகூறும் அளவிற்கு நாங்கள் குடும்பத்தை நடத்தி வரவில்லை. பணமும் மீதம் வராத அளவுக்கு நன்முறையிலே செலவு செய்து குடும்பபாரத்தை ஏற்று நடத்தி வந்தோம்.

என் ஆசை மனைவி மரகதத்தின் உள்ளம் நோகுமாறு நான் நடந்துகொண்டதில்லை. நான் இரண்டு ரூபாய் வேட்டி வாங்கிக்கொண்டாலும், அவளுக்கு இருபது ரூபாய் புடவைதான் வாங்கிக்கொடுப்பேன். அவளும் என் மேல் தன் அன்பையே வைத்திருந்தாள். சந்தோஷமாகவே எங்கள் வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது.

எப்பொழுதும் நான் பண்ணையிலிருந்து வீட்டிற்கு வரும்போது என்னை அன்புடன் உபசரிப்பாள். என் நண்பர் தமிழ்ச்செல்வனும் வருவார். இரண்டு பேரும் அந்த வாழை ஆராய்ச்சிப் பண்ணையிலே தான வேலை செய்கிறோம். என் மனைவி, நண்பர் தமிழ்ச்செல்வனிடமும் பேசிப் பழகுவாள். சிற்சில சமயங்களில் எனக்கு என்னவோ போல் இருந்தாலும் நான் தவறான கருத்துக்களுக்கு என் மனதில் இடம் வைப்பதில்லை. இப்படியே சென்றுகொண்டிருந்தது.

நண்பர் தமிழ்ச்செல்வனும் என் சொந்த ஊரிலேயே இருக்கிறார். ஒன்றாகவே பண்ணைக்குச் சென்று வேலைகளை முடித்துக்கொண்டு திரும்புவோம். ஒரு நாள் மாலை நான் வீட்டிற்கு வந்தபோது ஒரு தபாலை மரகதம் என்னிடம்கொடுத்தாள். அதில் என்னைக் கோயமுத்தூருக்கு மாற்றியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவைக் கண்டவுடன் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. இந்தக் குறைவான சம்பளத்திலே எப்படிக் கணவனும், மனைவியும் ஆடம்பரத்தைக் கைக்கொண்டு வாழும் கோயமுத்தூரிலே வாழ முடியும் என்று எண்ணினேன். ஒருபுறம் மனம் வேதனைப்பட்டது. எனக்குத் திருமணம் ஆகி வேலை கிடைத்து இரண்டு ஆண்டுகள்தான் ஆகியிருந்தன. அதற்குள் வேலை மாற்றல். அரசாங்க உத்தியோகம் அல்லவா? போய் வேலையை ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்? மனைவியை அழைத்துக்கொண்டு போனால் குடும்பம் நடத்துவது சற்றுக் கடினமாக இருக்குமே என்று எண்ணி ஒரு முடிவுக்கு வந்தேன். மனைவியை என் சொந்த ஊரிலேயே விட்டுவிட்டு நான் மட்டும் கோவைக்குச் செல்வதாக முடிவுசெய்து விட்டேன்.

நான் புறப்படும் நாளும் வந்தது. மனைவியிடம் சில புத்திமதிகளைக் கூறினேன். எவரிடமும் அதிகமாகப் பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டாம் என்றும், குடும்ப வேலையைக் கண்ணும் கருத்துமாக நடத்திவரவேண்டும் என்றும் கூறினேன். அச்சமயம் நண்பர் தமிழ்ச்செல்வனும் என்னை வழியனுப்புவதாக வந்திருந்தார். ஒருவாறாக மரகதத்தினிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். என்னை வழியனுப்பும்போது கண்கலங்கி அறையில் சென்று விம்மி விம்மி அழுதாள். நான் விடைபெற்றுக் கொண்டு கோவைக்குப் புறப்பட்டு விட்டேன்.

கோயமுத்தூரை அடைந்து வேலையில் அமர்ந்து என் பணியினைச் செய்யலானேன். நான் அடிக்கடி மரகதத்திற்குக் கடிதம் எழுதிவந்தேன். கடிதத்தைப் படித்து விஷயத்தைத் தெரிந்துகொள்வாள். முக்கியமான விஷயமாக இருந்தால் நண்பர்தான் எனக்கு எழுதுவார். தேவையான போது பணமும் அனுப்பி வைப்பேன். இருந்தாலும் கோவையிலிருக்கும்போது என் மனம் நிம்மதியில்லாமல்தான் இருந்து வந்தது. உறவினர்கள் வந்துபோய்க்கொண்டிருப்பார்கள், என்று மரகதத்திடமிருந்து கடிதம் வருவதிலிருந்து நானும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தேன்.

நான் கோயமுத்தூருக்கு வந்து 6 மாதங்களாகின்றன. ஒரு நாள் பண்ணையிலிருந்து நான் தங்கியிருந்த விடுதியை அடைந்தபோது விடுதிச் சொந்தக்காரர் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். கடிதம் அனுப்புவோர் விலாசம் இல்லாமல் இருந்தது. எவர் எழுதிய கடிதம் என்றும் என்னால் ஊகிக்க முடியவில்லை. எது எப்படியிருந்தால் என்ன என்று எண்ணி ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானேன். படிக்கும்போதே என் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. அந்த வாக்கியத்தை என்னால் இப்பொழுது சொல்லக்கூட நாகூசுகிறது. இருந்தாலும் சொல்கிறேன் "உன் மனைவி மரகதம் உன் நண்பன் தமிழ்ச் செல்வனுடன்தான் எப்பொழுதும் பழகிக்கொண்டிருக்கிறாள். அதன் காரணமாகத் தற்சமயம் கர்ப்பமுற்றும் இருக்கிறாள். அவள் நிலையைப் பார்த்து ஊர் சிரிக்கிறது இப்படித்தான் எழுதப்பட்டிருந்தது. என் மனம் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை... இருதயத்திலே ஈட்டிகள் பாய்வது போலிருந்தது. சம்பவம் உண்மையா, பொய்யா என்று ஊகிக்கவும் முடியவில்லை... ஒருபுறம் மனைவி மரகதம் அப்படிப் போகக்கூடியவள் அல்லவே என்று மனச்சாட்சி கூறுகிறது. இன்னொரு புறம் உண்மை நண்பனாக இருந்த தமிழ்ச்செல்வனா இப்படிச் செய்திருக்க முடியும் என்று எண்ணுகிறது. மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அந்தக் கடிதமே என் பெருமைகளை எல்லாம் குலைத்துவிட்டதாக எண்ணினேன், கடிதமோர் அக்கப்போர்க்

கடிதமாகவும் இருக்கிறது. அக்கப் போர்க் கடிதமாக இருந்தாலும் காரியம் நடவாமலா கடிதம் எழுதப்பட்டிருக்கும்? இவையெல்லாம் எண்ணிப் பைத்தியம் பிடித்தவன் போலவே காணப்பட்டேன்.

கடிதத்தைக் கண்டவுடன் என் மனம் கோவையில் இருக்க ஒரு நிமிடம்கூட இசையவில்லை. உடனே பண்ணை அதிகாரிக்கு விடுமுறைச் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு அடுத்த வண்டியிலேயே என் சொந்த ஊருக்குப் புறப்பட்டேன். ஊரையும் வந்து அடைந்துவிட்டேன். நான் சந்தேகப்பட்டுக் கொண்டு வந்தது போலவே என் வீட்டிலிருந்து நண்பர் தமிழ்ச் செல்வனும் வெளியே வந்துகொண்டிருந்தார். என்னால் ஆத்திரம் தாளமுடியவில்லை... ஆனால் என்னுடைய திடீர் வருகை மரகதத்திற்கும், நண்பருக்கும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. வழக்கம்போல் தமிழ்ச் செல்வனும் என்னை விசாரித்தார். நான் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை... அவரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப் போய்விட்டார். எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கமுடியவில்லை ... என் செய்கையைக் கண்டு மரகதமும் திடுக்கிட்டவளாய்க் காணப்பட்டாள்.

நான் வீட்டினுள்ளே என் அறைக்குச் சென்றேன். மரகதம் வந்தாள்... என் முன்னால் பிள்ளைத் தாய்ச்சிக்கோலத்தோடு நின்றாள்... என்னால் பொறுக்க முடியவில்லை... "பளார்" என்று கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தேன். அவ்வளவுதான் "அத்தான்" என்று கதறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டாள் ... அந்த நேரத்திலும் என் மனம் இரும்பாகத்தான் இருந்தது. நான் என்ன செய்கிறேன் என்றே தெரிந்துகொள்ள முடியவில்லை.... மீண்டும் அவளை நிறுத்திவைத்து உதைத்தேன்... கோபம் தீர அடித்தேன்...கதறிக் கதறி அழுதாள். இதுநாள் வரை நான் அவளை அப்படி அடித்ததே இல்லை. என் மானம் பறிபோகும் அளவிற்கு நடந்து கொண்டாளே என்று எண்ணித்தான் அடித்தேன். என் கைகளைக்கூட எஃகுக் குழாயாக மாற்றிக்கொண்டேன். அழுதாள் .... புழுவாய்த் துடித்தாள் .... மீண்டும அவளருகே சென்று "நான் கோயமுத்தூரிலிருக்கும்போது இங்கு யாருடன் நாடகம் ஆடினாய்?...உண்மையைச் சொல்லிவிடு" என்றேன். திகைத்து நின்றாள் ... "நான் ஒரு பாபமும் அறியேன்...எவருடனும் நான் பழக்கம் வைத்துக்கொள்ளவில்லை...கர்ப்பமுற்ற என்னை எப்படித்தான் மனமுவந்து அடிக்கத் துணிந்தீர்களோ...நான் யாருக்கும் அவச்சொல்லை உண்டாக்கவில்லை அத்தான் ... உண்டாக்கவில்லை அத்தான்" என்று வலி பொறுக்க முடியாமல் என் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினாள் ... நான் உடனே "அப்படியானால் இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்கள் பொய்யா" என்றேன். "அதில் என்ன எழுதியிருக்கிறது...சொல்லுங்கள் அத்தான்...யார் எழுதினார்கள்" என்றாள்... "நீ விபசாரி' என்று இந்தக் கடிதம் கூறுகிறது என்றேன்... "ஆ ...நானா விபசாரி ... தயவு செய்து உங்களது புனித வாயால் அப்படிக் கூறாதீர்கள் ... நீங்களா இப்படிக் கூறுகிறீர்கள்...உங்களையன்றி நான் வேறு எவரையும் மனதால் நினைத்ததுகூடக் கிடையாது...என்னை அப்படிக் கூறாதீர்கள்...வேறு எதைச் சொல்லி வேண்டுமானாலும் திட்டுங்கள்... "அந்த வார்த்தையை மட்டுப் தயவு செய்து சொல்லாதீர்கள்..." என்று அடித்த என் கைகளைப் பற்றிக்கொண்டு கதறினாள்...நான் ஒரே பிடிவாதமாக அவளை உதறிவிட்டேன... "தமிழ்ச் செல்வனுடன் குலாவிவிட்டு என்னிடம் மறைக்கவா பார்க்கிறாய் ... பாதகி என்றேன்... "அத்தான்...தமிழ்ச் செல்வன் தங்கமானவர் ... அவரைப்பற்றித் தவறாகக் கூறாதீர்கள்" என்றாள்...எனக்குச்சந்தேகம் அதிகமாகியது. அந்தக் கயவன் செய்த வேலைதான் இவையெல்லாம் என்று முடிவுசெய்து என் கோபம் தீரும் வரை அடித்துக் காயப்படுத்திவிட்டேன்...

பக்கத்து வீட்டில் இருந்த பெரியவர் ஒருவர் அழுகைக் குரலைக்கேட்டு, என்னிடம் வந்து "அட மதியிழந்தவனே...நீயும் ஒரு மனிதனா ... ஒரு கர்ப்பவதியிடமா உன் ஆண்மையைக் காட்டுவது... ம்...வெட்கமாக இல்லை" என்றார். அவர் சொன்ன பின்னும் என் கோபம் அடங்கியபாடில்லை...எவர் சொல்லும் என் காதில் ஏறவில்லை ...கடைசியில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அவளை அவள் தாய் வீட்டிற்கு அனுப்பிவிடுவது என்ற முடிவுக்கும் வந்துவிட்டேன். விவாகரத்துச் செய்யும் எண்ணத்துடனும் அவளை அனுப்புவதாகவும் தீர்மானித்துவிட்டேன். எனக்கும் தமிழ்ச்செல்வன மீதும் சந்தேகம்தான்...அப்போதைய என்னுடைய நிலைமையை எவரும் உணர முடியவில்லை ... உடம்பு நிறையக் காயங்களுடன் அவளை ஊருக்கு அனுப்பிவிட்டேன்...

அவளை அனுப்பியதிலிருந்து நான் தமிழ்ச் செல்வனுடன் சரியாகப் பேசுவதில்லை...அவளையும் துரத்திவிட்டேன். என்னுடன் இருப்பதாகக் கூறினாள்...ஓடிவிடு என்று கூறிவிட்டேன். தன் மனச்சாட்சிக்கு விரோதமாக எவ்விதத் தவறுதல்களும் செய்யவில்லை என்று மண்டியிட்டாள் ... மனம் மசியவில்லை. "கெட்டழிந்து போ" என்று கூறிவிட்டேன்.

நான் மனவேதனையுடனேயே இருந்தேன். இரண்டு மாதங்களுக்கு மேல் ஆயிற்று. ஒருநாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதைக் கண்டவுடன் என் மூளையே புத்துணர்ச்சி பெற்று விட்டது. என் மனைவியே அக் கடிதத்தை எழுதியிருந்தாள். அப் பொழுதுதான் என் தவறை உணர்ந்தேன். அந்தக் கடிதம்கூட இதோ இருக்கிறது. இக் கடி தத்தை நான் பத்திரமாக வைத் திருக்கின்றேன். இருங்கள் அதை நான் படித்துக் காண்பிக்கிறேன்.

அன்புள்ள அத்தானுக்கு,

வாழ்விழந்தவளாக விலக்கப் பட்ட மரகதம் எழுதுகின்றேன் இக்கடிதத்தைத் தயவு கூர்ந் முழுவதையும் படியுங்கள். நான் கடைசி வரையிலும், கூறுவ தெல்லாம் நான் தவறியவள் களங்கம் ஏற்படுத்தியவள் அ லள் என்பவைப்பற்றித்தான் தங்கள் நண்பர் தமிழ்ச்செல்வ நல்லவர். பிறர் மனைவி விரும்பாத உயர்ந்த எண்ண படைத்தவர். அவரைச் சிறிது சந்தேகிக்காதீர்கள். எவரோ எழுதிய கடிதத்தை வைத் கொண்டு உங்களது மாசும வற்ற மனதை சந்தேகத்திற் உட்படுத்தியிருக்கிறீர்கள். உ மையாகவும், கற்பு நெறியோடு வாய்ந்த என்னை ஏசியும், பே யும், அடித்தும், உதைத்

கொடுமைப்படுத்தினீர்கள். எல்லாவற்றையும் என் வயிற்றிலிருந்த உங்கள் குழந்தைக்காகப் பொறுத்துக்கொண்டேன். அந்தப் பொறுமையும் ஒரு எல்லையைக் கடந்துவிட்டது.

ஒரு வாரத்திற்கு முன்தான் ஆண் குழந்தை ஒன்று எனக்குப் பிறந்தது. உங்கள் வடிவம் அப்படியே இருக்கிறது. இந்தப் பிரசவத்திற்குப் பிறகுதான் என் முடிவை மாற்றிக்கொண்டேன். நான் துரோகி அல்ல. உங்களைக் களங்கப்படுத்தி என் கற்பை விலைகூற வாழ்நாளில் ஒருவினாடி கூட எண்ணியவளும் அல்ல. தமிழ்ச்செல்வன் அவர்களை நான் தவறான நோக்கத்துடன் விரும்பவுமில்லை. அவர் உத்தமர். கடைசியாக ஒன்று கூறி முடிக்கிறேன். இந்தக் குழந்தை உங்களுடையதுதான். அதை எடுத்துக் காப்பாற்றுங்கள். அனாதையாக விட்டுவிடாதீர்கள்.

வாழ்வை வெறுத்தவள்,

**மரகதம்.**

இதுதான் அக்கடிதம். படித்தேன், மீண்டும் படித்தேன். என் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது, உண்மை ஓரளவு எனக்குப் புலப்பட்டது. நண்பர் தமிழ்ச் செல்வனிடம் சென்றேன். அவரும் என்னைப் பார்த்தார். இருவரும் சிறிதுநேரம் மௌனமாகநின்றோம். பிறகு தமிழ்ச்செல்வன் கோபத்துடன் என்னைப்பார்த்து, "மதியிழந்தவனே! ஊரார் பேச்சைக் கேட்டுக்கொண்டு உன் மனைவி மரகதத்தைத் துரத்தினாயே! உனக்கு அறிவில்லை! அவள் புனிதத் தன்மை வாய்ந்த உத்தமியடா! கற்பின் இலக்கணம் தெரிந்தவளடா! அவள்மீது சந்தேகமா கொண்டாய்! என்மீதும் உனக்குச் சந்தேகம், அட நன்றிகெட்டவனே! என்னோடு இவ்வளவு நெருங்கிப் பழகியும் என் குணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லையே! உன் புத்தி ஏன் இப்படி மழுங்கிப்போக வேண்டும்! படித்தும் பண்பாடில்லாத முட்டாளாகவா நீ மாறவேண்டும்! மரகதம் மனமும், உடலும் நோகும்படி பேசி அடித்துத் துரத்திவிட்டாயே! இன்றே போய் அவளிடம் மன்னிப்புக்கேள்! களங்கமற்றவளான அவள் கால்களிலே விழுந்து மன்னிப்புக்கேள் ஓடு..." என்றான். என்னால் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மீண்டும் மனைவியின் முகத்திலும், மாமனார் முகத்திலும் எப்படி நான் விழிப்பேன். இருந்தாலும் உண்மையை அன்றுதான் அறிந்துகொண்டேன். மரகதம் தவறுடையவள் அல்ல. நான்தான் அந்தக் கடிதத்தைக் கண்டு மதியிழந்துவிட்டேன். வருந்தினேன். முடிவாக மரகதத்தைப் பார்க்க வேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று எண்ணிப் புறப்படச் சென்றேன். அப்பொழுதுதான் எனக்கு இன்னொரு கடிதமும் கிடைத்தது, "மரகதம் இறந்து

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள், கட்டுரைகள், கதைகள்

ஆகியவற்றுடன்

வண்ண முகப்பும், எண்ணத் தொகுப்பும்

கொண்டதாக

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1--00

விட்டாள்'' என்ற செய்திதான் அதில் காணப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை.

உடனே விரைந்து சென்றேன்; அங்கு என் மனைவி மரகதத்தை என் அமைதியிழந்த கண்கள் பிண உருவில்தான் கண்டன. அவள் அழகை அள்ளி அள்ளிப் பருகி ஆனந்தமடைந்த அதே கண்கள்தான் அவள் உருவைக் கண்டதும் கண்ணீரைக் குளமாகப் பெருக்கின. கதறினேன்... நான் செய்தமாபெரும் துரோகத்தையும், கொடுமையையும் எண்ணி எண்ணிக் கதறி அழுதேன். மானம் தாங்காமல் விஷம் அருந்தி உயிரை மாய்த்திருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டதும், என் எதிர்காலமே இருண்டுவிட்டதுபோல் இருந்தது. சிசுவைப் பார்த்தேன், அழுதுகொண்டிருந்தது. என்னால் இந்தச் சோகக் காட்சிகளைக்கண்டு கொண்டு நிம்மதியுடன் இருக்க முடியவில்லை; பக்கத்திலிருந்த தூணிலே என் தலையை மோதிக் கொண்டேன். தலையைத் தடவிய போது இரத்தம்தான் கையில் பட்டது. மனைவியின் சடலம் அருகே சென்று "மரகதம்... நான் மதியிழந்தவன்... என்னை மன்னித்துவிடு... மன்னிப்பதற்குக் கூடத் தகுதியற்றவன்... இரத்தத்தைக் கண்டாவது என் நிலையை உணர்ந்து மன்னித்துவிடு... மன்னித்தேன் என்று சொன்னால்தான் என்மனம் நிம்மதியடையும்.'' என்று பித்துப்பிடித்தவன்போல் கூறிக் கதறினேன். அவையனைத்தும் அந்த உயிரற்ற ஓவியத்தின் செவிகளில் ஏறியதா! அங்குள்ள அத்தனைபேரும் அவளுடைய பெருமைகளைப்பற்றியும், என்னுடைய கொடூரத்தன்மையைப் பற்றியும் பேசினார்கள். என்னால் துக்கம் தாளமுடியவில்லை. சவத்தின் அருகே அமர்ந்து கதறிக்கொண்டிருந்தேன். என்னைச் சமாதானப்படுத்தினார்கள்.

என் அன்புத் தெய்வத்தின் சடலம் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பலர் கண்ணீர் வடிக்கப் புதைக்கப்பட்டது. அழியாத ஒளி என் கண்களைவிட்டு அகன்றுவிட்டது. கண்ணீரைச் சிந்தினேன். சமாதியின்மீது 'மரகதம் புனிதமானவள்'' என்று கை என்னையறியாமலேயே எழுதத் தொடங்கிவிட்டது. அன்றிலிருந்தே என் மனம் சரியான நிலையில் இல்லை, துயர் நிறைந்த உள்ளத்துடன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டேன்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்து மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டன. சிற்சில சமயங்களில் பழைய எண்ணங்கள் நினைவுக்கு வரவே நான் மரகதத்தின் சமாதி அருகே சென்று கண்ணீர் வடித்துப் புலம்புவது உண்டு. அவள் இறந்தது முதல் என் சிந்தையே கலங்கிவிட்டது. இன்றோடு என் கண்மணி இறந்து சரியாக மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்தப் பையனுக்கும் மூன்று வயதாகப் போகிறது. நான் மதியிழந்ததின் காரணமாக என் அன்புக்கினியவளை இழந்து இன்று அனாதையாகப் பைத்தியம் பிடித்தவன்போல் திரிகின்றேன். இதுதான் அவள் சமாதி. இந்தச் சமாதியைப் பார்க்கும் போதெல்லாம் என் உள்ளம் வெடித்துவிடும் நிலையில்தான் இருக்கும். இவைதான் என் சோக வரலாறு நண்பரே...........'' என்று கூறி முடித்தார்.

இவ்வளவு நேரமாகப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் நிலையை என்னால் விவரிக்கவே முடியவில்லை. ஒரு மனிதன் தன்னுடைய சூழ்நிலையால் வந்த வினையை உணர்ந்து பார்க்காமல் எவ்வளவு பெரிய தவறைப் புரிந்துள்ளான். தவறு புரிந்துவிட்டுப் பின்னால் வருந்தவும் செய்கிறான். மதிபடைத்தவனாக இருந்தால் மனைவிமேல் சந்தேகப்பட்டிருக்கமாட்டானல்லவா?... மரண யாத்திரைக்கும் அவ்வளவு விரைவிலே அனுப்பியிருக்கமாட்டானல்லவா? ...என மனம் பலவாறாக எண்ணத் தொடங்கியது.

நண்பனைப்போல் அவரைப் பாவித்து "வாழ்க்கையிலே ஒரு சிலருக்கு இப்படி நிகழ்வதுண்டு. அந்தமாதிரியான நேரத்திலே பகுத்தறிவையும், மதி நுட்பத்தையும் பயன்படுத்தித்தான் எக்காரியத்திலும் ஈடுபடவேண்டும். அதுதான் மனிதனுக்கு அழகு. இனிமேலாவது தீர விசாரிக்காமலும், ஆலோசியாமலும் எக்காரியத்தின் மீதும் சந்தேகப்படாதீர்கள். இந்தச் சம்பவம் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஓர் படிப்பினையாக இருக்கட்டும்,'' என்று கூறி அவரை ஆறுதல்படுத்தி விடைபெறலானேன்.

அவரும் தன் குழந்தையைக் கையில் தூக்கித் தோளில் அணைத்துக்கொண்டு சமாதிக்கு ஒருமுறை வணக்கம் செலுத்திவிட்டு மெல்லச் சோகத்துடன் நடக்கத் தொடங்கினார். அவர் மறையும் வரை பார்த்துக்கொண்டே நின்றுவிட்டு நானும் கடைசியில் வீடு திரும்பினேன்.

★


## "திராவிட நாடு" பொங்கல் மலர், விலை ரூ. 1-00

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

பொங்கல் மலரில் அண்ணா அவர்களின் கருத்துப் படையல்களே அதிகம் இடம் பெறுவதால், தாங்கள் முன்னதாகத் தேவையான காப்பிகளுக்கு ஆர்டர் தருவதுடன், மலர் 1-க்கு **0—75** காசு வீதம் முன்பணம் அனுப்பிவைக்கவும். 28—12—'59க்கு மேல் வருகின்ற ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

பொறுப்பாளர்.
"திராவிட நாடு"

முக்கிய அறிவிப்பு:— பழையபாக்கி வைத்திருப்பவர்கள், பாக்கி முழுவதையும் மலருக்குரிய முன்பணத்தோடு சேர்த்தனுப்பினாலன்றி, மலர் அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# சங்க காலத்தில் தங்கம்

—[அறவோன்]—

நாடுகள் பல கண்டு தன் மன்னரின் முடி ஆட்சியின் கீழ் கொணர்ந்து, கொடி கட்டி ஆள வேண்டுமென நினைத்துக் காடுகளையும் மேடுகளையும் தாண்டி அலை வீசும் நீலக்கடலையும்கடந்து, பயன் படாது எனக் கருதப்பட்ட பாலை வனங்களிலும் பாசறை அமைத்து ஆங்கிலேயர்தம் பொருள் வளத்தைப் பெருக்கிய நேரம் அது. குழுக்களாகப் பிரிந்து உலகத்தின் நாற்றிசைக்கும் சென்றனர். பரந்து விரிந்து கிடக்கும் பசிபிக் பெருங் கடலின் தென்கிழக்கில் கிடக்கும் ஆஸ்திரேலியாக்கண்டத்தைக்கண்டனர். துவக்கத்தில் எவரும் குடியேற முன்வரவில்லை. எனவே ஆங்கில அரசாங்கம் குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒரு அந்தமானாகவே கருதிவந்தது. சின்னாட்களில் குடியேறுவோர் தொகை பெருகியது. சாரை சாரையாய் மக்கள் கூட்டம் விரைந்தது. ஆற்றங்கரைகளிலும் அருவிக் கரைகளிலும் கற்குவியல்கள்போல் ஏராளம் பொற்குவியல்கள் கிடக்கின்றன, என்ற பேச்சு இங்கிலாந்து நாட்டில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. சென்றவர்கள் பெருஞ் செல்வச் சீமான்களாய் நாடு திரும்பினர். பூர்வக் குடியினருக்கு, கண்ணாடி, கத்தி போன்ற பொருட்களைக் கொடுத்துக் காடுகளிலும் மலை இடுக்குகளிலும் கிடந்த தங்கத்தைச் சேகரித்தனர். நிலத்தின் மேற்பரப்பில் காணப்பட்ட தங்கம் தீர்ந்தவுடனே நிலத்தைக் குடைந்து கனிவளம் சேர்த்தனர். தென்னாட்டவர் வாழ ஏற்ற இயற்கையமைப்பும்--தட்ப வெட்ப நிலையும் கொண்டது அப்பெரும் நிலம். எனினும் வெள்ளையர்கள் ஏகபோகமாக ஆண்டு வருகின்றனர்.

இத்தகைய செல்வங் கொழிக்கும் நிலையொன்று இராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நிலவியது. தமிழர்களின் பொற்காலமாம் சங்க காலத்தில் தமிழகத்தில் பொற்குவியல்களுக்குப் பஞ்சமேயில்லை.

வேட்டுவன் ஒருவன் காட்டிற்குக் களிறு வேட்டைக்குச் செல்கின்றான். கணையைத் தொடுத்து களிறொன்றை வீழ்த்தினான். களிறு பிளிறிக்கொண்டே நிலம் சாய்ந்ததும் கரும் பெருங்குன்றின் மேல் இருப்பதுபோல் அதன்மீது உட்கார்ந்து அதன் கூரிய கொம்பிரண்டையும் எடுக்கின்றான். அந் நிலப்பகுதி தங்கத்தின் இருப்பிடம் எனக் கேள்விப்பட்டிருந்தான். எனவே யானைக் கொம்புகொண்டு நிலத்தை கிளறுகிறான். என்ன ஆச்சரியம்! தங்கம் கிடைக்கப் பெற்றான். ஆனால் களிற்றின் கூரிய கொம்பு முறிந்துவிட்டது. முறிந்த கொம்பைக் கையிலே குத்திப் பார்க்கின்றான். கொற்கைத் துறையின் முத்தொன்று இருக்கக் காண்கிறான். மிக்க மகிழ்ச்சியுடன் வீடு திரும்புகின்றான். இது நெடுந்தொகை அளிக்கும் செல்வங்களிலொன்று.

கொல்லைப்புறத்தில் கோழி மேய்கின்றது. கோழி நிலத்தைக்கிளறுகின்றது. நிலத்திலிருந்து பொன் வெளிவந்து மின்னுகின்றது.

வீறுகொண்ட காட்டுப்பன்றியொன்று நிலத்தை கிளறுகின்றது. கொற்கைத் துறையில் விளைந்த நல்முத்துக்கள்பல சிதறுகின்றன.

தானியக் கதிரினை பறவைகள் கவராவண்ணம் காக்கின்றாள் மங்கை நல்லாள். கவர வரும் பறவைகளைப் பொன்னால் செய்த தன் காதணியைப் பயன்படுத்தி விரட்டினாளாம்.

மலைகளைக் குடைந்தோ நிலத்தைப் பிளந்தோ அரும்பாடுபட்டுத் தங்கத்தைப் பெற்றிலர். எளிதில் எங்கும் கிடைக்கப்பெற்றனர்.

இவ்வாறு நிலம் தங்கச் சுரங்கமாய் விளங்க வெளி நாடுகளிலேயிருந்தும் கலங்களில் தங்கம் வந்ததாம்.

"யவனர் தந்த வினை மாண் நன்
கலம் பொன்னொடு வந்து கறி
யொடு பெயரும் வளங்கெழு
முசிறி" (அகம்: 149.)

யாவனர்கள் பொன்னைத் தந்து மிளகொடு சென்றனர்: எனின் தமிழகத்தின் பொருளாதாரம் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்திருக்கவேண்டும்.

ஆனால் இன்றைய நிலை என்ன? தங்கம் விளைந்த நாட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. பொன் விளைந்த நாட்டில் இன்று பொலிவில்லை.

நல் முத்துக்கள் விளைந்ததாம் நம் நாட்டிலே. இன்று நம்மவர் பித்தர்களாய்ப் பிற நாடுகளில் அலைகின்றனர்.

கலம் செலுத்தி நிலமடைந்து வலம் வந்து வாணிபம் செய்தனராம் நம் முன்னோர். அச்சீரெங்கே? அச்சிறப்பெங்கே? படை எடுத்து, தடை கடந்து கொடி கட்டினராம் எம்முன்னோர். அப்படை எங்கே? அவர்தம் கொடி எங்கே?

கல்லெடுக்க வைத்த வீரம் எங்கே? காவடி தூக்கிச் சோரம் போகும் நிலை இங்கே? பொங்கு புனல் அருவியென முழக்கமிடுவராம் புலவர் பெருமக்கள். இன்று அம்முழக்கம் எங்கே? கங்கையிலே நீராடி, சிங்களத்தை அடக்கிய


## "திராவிட நாடு" பொங்கல் மலர்.

### சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா ஒன்று. எனவே, மலர் தேவைப்படும் சந்தாதாரர்கள் 0—50 புதிய காசு அனுப்பி மலரைப் பெறவும். பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் ரூபா 1—00 அனுப்பிப் பதிவு செய்து கொள்வதுடன், பணம் அனுப்பும்போது சந்தா எண்ணைத் தவறாது குறித்தனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

அவ்வீரம் எங்கே? பனிவரையை எல்லையாகக் கொண்ட தனி அரசு எங்கே? அன்னை அரியணையிலே வீற்றிருந்தாளாம் பொன் பூண்டிருந்தாளாம். அணிகலன் பல பெற்றிருந்தாளாம்! எங்கே என் அன்னையின் அரியணை? முரசொலிக்கிறதென்றால் முகமலர்ச்சியோடு அணி வகுக்கும் மறவர் கூட்டமெங்கே? அன்றலர்ந்த மலரின் நறுமணத்தைத் தாங்கிவரும் தென்றலெங்கே? வீரரோடு விளையாடிய போர்வாள் எங்கே?

எங்கும் சென்றுவிடவில்லை. மங்கி மறைந்து போகவுமில்லை. மாற்றான் பிடியிலே சிக்கிச் சீரழியும் நம் நாடாம் திராவிட நாடு விடுதலை பெறவேண்டும். விடுதலை பெற்றால்........

நிலத்தைக் குடைந்து, நீள்வரையைப் பிளந்து தங்கமெடுப்போம். காடுகளில் தங்கம் கிடைக்காமலிருக்கலாம். தங்கத்தை ஈட்டித் தரும், மிளகு, இரப்பர், காப்பி, தேயிலை இவை உண்டு.

கொல்லைப் புறத்திலிருந்து தங்கம்கிடைக்காமலிருக்கலாம். பல கொல்லைகளைக்குடைந்து, தொல்லைகளைத் தாங்கினால் நிலத்துக்கடியில் புதைந்துகிடக்கும் கறுப்புத் தங்கம் வெளிவரும்.

நல்முத்துக்கள் உண்டு. ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்ற அணு அடங்கிய மணல் உண்டு நம் கடற்கரையில்.

ஆற்றங்கரைகளில் தங்கம் இல்லாமல் இருக்கலாம், ஆனால் அவ்வற்றிலிருந்து மின்சாரமெனும் ஆற்றலைப் பெறலாம். ஊற்றோரங்களில் செல்வம் இல்லாமலிருக்கலாம், பொருளைத் தேடித்தரும் மண்ணெண்ணெய் ஊற்றுக்கள் உண்டு.

சோற்றுக்கு வழி அற்ற இந்நிலைமை மாற திராவிடநாடு அமைப்போம்.

அன்று வீரராகவிளங்கியமறவர் குடிப் பெருமக்களின் வழித்தோன்றல்களே! அன்று நம் முன்னோர் நாடுகாக்க, போர்செய்து வந்தனர். இன்று நாம் விடுதலைபெற அறிவென்னும் ஆயுதமெடுத்து அறியாமை யென்னும் இருளைக் கிழித்து நாடு நலம் பெறப் பாடுபடுவோம்.

★

## வீரஞ்செறிந்த நாவீறு படைத்த

# நாவலர் மறைவு

### ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

—OOOOO—

# தி. மு. கழகப் பொதுச்செயலாளர் பரிவுச் செய்தி

—OOO—

இன்றைய தமிழகத்தின் முதுபெரும் புலவர்களில் முதல்வராக வைத்து எண்ணப்பட்டும் பாராட்டப்பட்டும் வந்தவரும், நாவீறு படைத்த நாவலர் என்று தமிழ்ப் பெருங்குடி மக்களால் போற்றப்பட்டு வந்தவரும் ஆன பேரறிஞர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்கை எய்திய துக்கச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயருற்றேன். அவரது மறைவு தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். நாவலர் பாரதியார் அவர்களின் மறைவால் தமிழ்கூறு நல்லுலகம் ஒரு பெருந் தமிழ்ப் புலவரை, ஒரு பெருந்தமிழ்ப் பேராசிரியரை, நாவீறு படைத்த ஒரு பெருஞ் சொற்பொழிவாளரை, அஞ்சா நெஞ்சத்துடன் உண்மைக்காக வாதாடும் ஒரு பெரும் வழக்கறிஞரை, தமிழ் மொழிக்காகவும் தன் நாட்டுக்காகவும் பாடுபட்ட ஒரு பெரும் விடுதலை வீரரை இழந்தது என்றுதான் சொல்லவேண்டும். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஆற்றிய அரும்பணிகளும், இந்தியத்துணைக்கண்ட விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுச் செய்த தொண்டுகளும், நல்ல தமிழ்மணங் கமழுமாறு எழுதித் தந்துள்ள இலக்கிய நூல்களும், அவர் ஆற்றிய ஆணித்தரமான வீரஞ்செறிந்த சொற்பொழிவுகளும், தமிழைக் காக்க இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய திறனும், தமிழர்க்குப் பகையானவர்களை எதிர்த்து நின்ற வீரமும் யாராலும் மறக்கக்கூடியன அல்லவாகும். அவரது தோற்றம் — கருத்து — எழுத்து — சொல் — செயல் ஆகிய எல்லாம் வீரஞ்செறிந்தனவாகும். இப்படிப்பட்ட நாவலர் பாரதியாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா. நெடுஞ்செழியன்.**

*15—12—59.*